பக்கங்கள் : பதினாறு

Registered as a Newsp

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 18 திங்கட்கிழமை (02-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:251

# தேங்கியது சமாதான முயற்சி

# புதிய நகர்வு எதுவும் இல்லை

## முரண்பாட்டுச் சூட்டைத் தணிவிப்பதற்காக காலத்தை விட்டுப்பிடிக்க நோர்வே முடிவு

கொழும்பு,ஓகஸ்ட் 2

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் சமாதான முயற்சிகள் தேக்கமடைந்து - முடங்கிப்போய்விட்டன. இப்போதைக்கு புதிய முயற்சிகளோ, நகர்வுகளோ, முன்னெடுப்புக்களோ இடம்பெறா.**

**சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் இடையிலான முரண்பாட்டால் எழுந்திருக்கும் சூட்டைத் தணிவிக்கும் விதத்தில் காலத்தை விட்டுப்பிடிக்க அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பு தீர்மானித்திருக்கிறது என அறியவருகின்றது.**

அமைதி முயற்சிகள் தொடர்பான சமாதா பேச்சு மேசைக்கு இலங்கை அரசையும் லைப் புலிகளையும் கொண்டுவரும் பகீர உ. பிரயத்தனத்தில் ஈடுபட்ட நோர்வே அந்த எத்தனத்தில் களைத்துப் போய்விட்ட நிலையில் இத்தகைய முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் பொறுப்பாளரையும் கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஏனைய பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் கடந்த வெள்ளியன்று லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போதே நோர்வேத் தரப்பின் இந்த முடிவு

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தவில் நேற்றிரவு லொறியில் குண்டுவெடிப்பு; நால்வர் படுகாயம்!

மட்டக்களப்பு,ஓக.2

கல்முனையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற லொறி ஒன்றை நேற்றிரவு 8.30 மணியளவில் பொலீஸார் சோதனை செய்த சமயம் குண்டு ஒன்று வெடித்ததில் பொலீஸ் கான்ஸ்டபிள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

வெலிகந்த - செவனப்பிட்டி பொலீஸ் சோதனை முகாமில், அரிசி ஏற்றிச்சென்ற முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் லொறி சோதனைக்காக மறிக்கப்பட்டது.

அந்த லொறியின் முன்பக்கத்தைப் பொலீஸார் சோதனை செய்த சமயம் குண்டு ஒன்று வெடித்தது என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் மோகன் படுகொலை; இதுவரை 25 பேர் விசாரணை

கொழும்பு,ஓக.2

பம்பலப்பிட்டியில் டுப்பிளிக்கேசன் வீதியில் நேற்றுமுன்தினம் புளொட் மோகன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 25 பேரைப் பொலீஸார் விசாரணை செய்துள்ளனர். அவர்களின் வாக்குமூலங்களையும் பதிவு செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத்துறைப் பிரிவு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் லூகொட இதனைத் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. கொலை தொடர்பான உறுதியான தகவல்கள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

சம்பவத்துக்கு சில தினங்களுக்கு முன் அவரது வீட்டுக்கு வந்து ஒருவர் சந்தித்துச் சென்றுள்ளார் என்றொரு தகவல் கிடைத்துள்ளது. - என்றார் அவர். (எ-3-9)

## ஆயுதங்களுடன் நேற்று மூவர் கிழக்கில் புலிகளால் கைது!

மட்டக்களப்பு,ஓக.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான உறுகாமம், கரடியனாறுப் பகுதியில் நேற்றுக்காலை ஆயுதங்களுடன் மூவர் விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் தேசவிரோதக் குழுவுடன் தொடர்புடையவர்கள் என விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

ஆறுமுகம் அரிச்சந்திரன் (வயது 30 - பெரிய புல்லுமலை), செல்லத்துரை சந்திரசேகரம் (வயது 27 - பெரியபுல்லுமலை) ஆகியோர் உறுகாமத்தில் வைத்தும் -

குணபண்டா சின்னவன்(வயது38 - பெரிய புலலுமலை) என்பவர் கரடியனாற்றில் வைத்தும் - தம்மால் கைதுசெய்யப்பட்டனர் என அரசி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் திடீர்ச்சோதனைகளுக்கு உத்தரவு

கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் திடீரெனச் சோதனைச் சாவடிகள் அமைத்து சோதனைகளை மேற்கொள்வதற்கும், திடீர் சுற்றிவளைப்புக்களை நடத்துவதற்கும் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். கொழும்பு மேற்கு, தெற்கு, வடக்குப் பகுதிகளின் முக்கிய இடங்களில் சோதனைச்சாவடிகள் நேற்றுமுன்தினம் (சனிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் கைதான போராளிகளுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,ஓக.2

அக்கரைப்பற்றில் உள்ள விசேட அதிரடிப் படையின் சோதனைச் சாவடியில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட 7 போராளிகள் உட்படப் பத்துப் பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மட்டக்களப்பு பதில் நீதிவான் எஸ்.ஜெகநாதன் உத்தரவிட்டார்.

கொக்கட்டிச்சோலையில் இனிப்புப் பண்டங்களின் வியாபாரத்துக்குச் சென்ற வான் ஒன்று மட்டக்களப்பு நகரை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது. அந்த வானில் 7 போராளிகள் ஏறிவந்தனர்.

அந்த வான் அக்கரைப்பற்றில் உள்ள விசேட அதிரடிப்படையின் சோதனைச்சாவடி

(16ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகம் குறித்து

## புலிகளுடன் பேசுவதற்கு எதிராக ஜே.வி.பி. பகிரங்கக் கூட்டங்கள்

கொழும்பு,ஓக.2

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி புலிகளுடன் பேச்சு நடத்த முயல்வதைக் கண்டித்தும், அதை எதிர்த்தும் பகிரங்கக் கூட்டங்களை நாடு முழுவதும் நடத்துவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் இந்தப் பகிரங்கக் கூட்டத் தொடரை முதற்கட்டமாகக் கொழும்பில் நடத்த ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளது.

'என்றும் சமாதானத்தின் விரோதிகள் யார்? என்ற தலைப்பில் இக்கூட்டங்கள் நடத்தப்படும்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவைத் தலைமைப் பேச்சாளராகக் கொண்டு ஆரம்பமாகும் இந்த எதிர்ப்புப் பிரசாரக் கூட்டங்களில் அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, நந்தன குணதிலக, அநுர திஸாநாயக்க போன்றோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ச்சியாக 20 நாள்கள் நாட்டின் முக்கிய நகரங்களில் இந்தக் கூட்டங்கள் நடைபெறும் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தனிநாட்டுக்கு வழிசமைக்கும். அது பற்றிப் பேசுவதே

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜயந்த தனபால யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஓக.2

அரசின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றார்.

இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர், படை அதிகாரிகள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், அரச அதிபர் உட்படப் பலரைச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றார்.

சமாதான முன்னெடுப்புக்களில் மக்களின் நிலைப்பாடு, அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக அவர் இங்கு ஆராய்வார்.

புதிய பதவியை ஏற்றபின் அவர் முதல் தடவையாக கிழக்கு சென்றிருந்தார். அதன் பின் யாழ்ப்பாணத்துக்கு அவர் வருகின்றார்.(எ-3)

## இடைக்கால நிர்வாகம் தமிழர்களின் உரிமை அதனை ஐ.நா. ஏற்று அங்கீகரிக்கவேண்டும்

### அந்த அமைப்பின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தமிழர்கள் மனு

சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு அமைய தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பிரயோகிக்கவும், தமக்கான இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை உருவாக்கவும் உரிமை கொண்டவர்கள் என்பதை ஐ.நா. அங்கீகரிப்பதற்கான பரிந்துரையை ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு செய்யவேண்டும்.

இப்படி ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

தற்போது ஆரம்பித்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் பாதுகாப்புக்கும் மேம்பாட்டிற்குமான உப ஆணைக் குழுவின் 56ஆம் கூட்டத் தொடரில் இதுதொடர்பான மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இம்மனுவில் தமிழ் மக்களின் இன்றைய வாழ்நிலை தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழ்மக்களுக்கு எதிரான பொருண்மிய, சமூக மற்றும் பண்பாட்டு உரிமை மீறல்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கருணா குழுவுடன் இயங்கியதால்தான் புளொட் மோகன் தீர்த்துக்கட்டப்பட்டார்

கொழும்பு,ஓக.2

கடந்த 25ஆம் திகதி கொழும்பு, கொட்டாவ வில் கொல்லப்பட்ட கருணாவின் ஆள்களோடு சேர்ந்து இயங்கியமையினாலேயே புளொட் மோகனும் தீர்த்துக்கட்டப்பட்டார் என விடயம றிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கருணா குழுவினரோடு சேர்ந்து இயங்க வேண்டாம் என விடுதலைப் புலிகள் ஏற்கனவே கடுமையான எச்சரிக்கை விடுத்திருந்தனர் என்பது தெரிந்ததே.

கொட்டாவவில் கருணா ஆள்கள் கொல்லப்பட்ட வீட்டில் சொகுசு கார் ஒன்று தரித்து நின்றதல்லவா? அந்தக்காரை கருணா ஆள்களோடு சேர்ந்து பயன்படுத்தியவர்களில் புளொட் மோகன், நிலாம் என்ற பொலீஸ் புலனாய்வு நபர் ஒருவர் போன்றோரும் அடங்குவர் எனவும் -

அதுபற்றிய விவரங்கள் அனைத்தும் புலிகளுக்கு ஆதியோடுஅந்தமாகத் தெரியுமெனவும் - அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இராணுவப் புலனாய்வாளர்களுடன் சேர்ந்து புளொட் மோகன் இயங்கி வந்தார் என்பதால் புலிகளின் தாக்குதல் பட்டியலில் அவரின் பெயரும் இருந்திருக்கக்கூடும். எனினும், யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருந்ததால் அவர் மீது கைவைப்பதைப் புலிகள் தவிர்த்து வந்திருக்கலாம் ஆனால், கருணாவின் சகாக்களோடு நெருங்கிச் செயற்பட்டதால் அவர் தமது மரணத்தை விரைந்து - வருந்தி - அழைத்துவிட்டார் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

## ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,ஓக.2

அரியாலை கல்வி வளர்ச்சிக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ப.சசிகுமார் தலைமையில் காந்தி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழா அரங்கில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் கௌரவ, சிறப்பு விருந்தினர்களும் இதில் கலந்துகொள்வர். விழாவின் இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-7)

## புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

ஜாதிக ஹெல உறுமய கட்சியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று புத்தளம், தில்லையடி அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

காலை 9.30மணிமுதல் 10.30மணிவரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை புத்தளம் கத்தோலிக்க மறை மாவட்டம் ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 17 கத்தோலிக்கத் தேவாலயக் கிளைகள் இதில் பங்குபற்றின. ஆர்ப்பாட்டக்காரர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (க)

## ஷெல் காஸ் விலை 70 ரூபாவால் எகிறியது!

ஷெல்காஸின் விலை எழுபது ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று ஞாயிறு நள்ளிரவு தொடக்கம் இவ்விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதுவரை 620 ரூபாவாக விற்கப்பட்டுவந்த ஷெல்காஸ் தற்போது 690 ரூபாவாக உயர்ந்துள்ளது.

அரசு ஷெல்காஸின் இறக்குமதிக்கு வழங்கி வந்த நிவாரணத்தை நீக்கியதை அடுத்தே இவ்விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதாக ஷெல்காஸ் லங்கா நிறுவனம் அறிவித்திருக்கிறது. (க)

### கதைவிடுகிறது படைத்தரப்பு

# சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகனை தெரியவே தெரியாது என்கிறது இராணுவம்

நேற்றுமுன்தினம் காலை பம்பலப்பிட்டி டுப்ளிகேஷன் வீதியில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகனுக்கும் இராணுவத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இருந்ததில்லை என இராணுவத் தலைமையகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

புளொட் மோகன் என்று அழைக்கப்படும் கந்தையா யோகராசா என்ற நபர் பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

கேணல் சுமேத பெரேராவின் இந்த மறுப்பை, ஒரு கோப்பை சோற்றுக்குள் முழுப் பூசணிக்காயை வைத்து மறைக்க முற்படும் ஒரு செயல் என மனித உரிமையாளர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

புளொட் இயக்கத்தை விட்டு விலகிய கையோடு பகிரங்கமாக இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து செயற்பட்ட புளொட் மோகன், ஆரம்பத்தில் கொழும்புப் பகுதியில் தனது கைவரிசையைக் காட்டினார். 90களில் கொழும்பில் உள்ள லொட்ஜுகளில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகள் மற்றும் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளின் கைதுகள், அவர்களைச் சித்திரவதைக்கு உட்படுத்தியமை, பலர் காணாமற்போனமை போன்றவற்றோடு புளொட் மோகனுக்கு நேரடிச் சம்பந்தம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இராணுவத்தினர் மீது மிகுந்த விசுவாசம் கொண்ட இவர், இராணுவத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்துவந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர் இவர்.

1989ஆம் ஆண்டு வண.பிதா சந்திரா பெர்னாண்டோவைக் கொலை செய்தார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் இந்திய இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவத்துக்குப் பொறுப்பாகவிருந்த காலித் என்பவரைக் கொலைசெய்துவிட்டு லட்சக்கணக்கான ரூபா பணத்தை இவர் சுருட்டினார் என்றும் கூறப்பட்டது. பத்திரிகையாளர் நித்தியானந்தனைச் சுட்டும் வெட்டியும் கொலை செய்ய முயற்சித்தார் என்பன போன்ற பல குற்றச்சாட்டுக்கள் இவருக்கு எதிராக உள்ளன.

மட்டக்களப்பு நகரின் மத்தியில் முகாம் ஒன்றை அமைத்து ஆயுதங்கள் சகிதம் இராணுவத்தினருடன் இவர் இயங்கி வந்தார். அச்சமயத்தில் பலர் கைதுசெய்யப்பட்டதற்கும், காணாமற்போனதற்கும் இவரே காரணமாகவிருந்தார். கொக்கட்டிச்சோலையில் மோகனின் மிரட்டலுக்குப் பயந்து ஒரு குடும்பம் தற்கொலை செய்து கொண்டது.

கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரிப்பதற்காக 90களில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள, பாலியல் வல்லுறவுகள், கைதுகள் போன்றவற்றைப் பற்றி விசாரணைகளை மேற்கொண்டது.


கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 350 பேரின் மரணத்துக்குக் காரணமானவர்களில் புளொட் மோகனும் முக்கியமானவர் எனத் தனது அறிக்கையில் விசாரணை நடத்திய ஆணைக்குழு தெரிவித்திருந்தது. எனினும் அவர் மீது அரசு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, இப்படியான பின்னணியைக் கொண்டிருக்கும் புளொட் மோகன் பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது என இராணுவத் தலைமையகம் விடுத்திருக்கும் செய்தி குறித்து மனித உரிமையாளர்கள் பலரும் தமது ஆதங்கத்தையும் விசனத்தையும் வெளியிட்டுள்ளனர். (க)



நேற்றுமுன்தினம் யாழ். நகரில் இடம்பெற்ற அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் திரு... சுவடி பவனியின்போது எடுக்கப்பட்ட படம். • (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்...



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் நயினை நாகபூஷணி அம்மன் மீது பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய இசைமாலை - ஒலிப்பேழை வெளியீட்டு விழா நேற்று நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கலாநிதி கி.விசாகரூபன் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், பேராசிரியர் மா.வேதநாதன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரை முதலாவது படத்தில் காணலாம். கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் உரையாற்றுவதையும் (உட்படத்தில்) நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படத்தில் காணலாம்.

### பட்டதாரி தொழில் நியமனங்களில்

# தமிழ், முஸ்லிம் பட்டதாரிகள் புறக்கணிப்பு; ஆட்சேபித்து அம்பாறையில் இன்று ஹர்த்தால்

கொழும்பு,ஓக.2

தொழில் நியமனங்களில் அம்பாறை மாவட்டத் தமிழ் - முஸ்லிம் பட்டதாரிகளுக்கு அநீதியிழைக்கப்பட்டதைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

நியமனம் வழங்குவதற்காக அரசினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியலில் அம்பாறை மாவட்டத் தமிழ் - முஸ்லிம் பட்டதாரிகள் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்து பாதிக்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

இன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், வங்கிகள், உயர் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் மூடி போக்குவரத்துக்களை ஸ்தம்பிதம் செய்து இந்த ஹர்த்தால் பூரண வெற்றிபெற ஒத்துழைக்குமாறும் பாதிக்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசியல் மயமாகிப்போன பட்டதாரிகள் நியமனத்தைக் கண்டித்து ஹர்த்தால் எனும் தலைப்பில் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் உட்பட அனைத்து அமைச்சர்களும் இந்த நியமனங்கள் அரசியல் பேதமின்றி நியாயபூர்வமானதாக வழங்கப்படுமென உறுதியளித்துவந்துள்ளனர்.

ஆனால், தற்பொழுது அரசினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியலில் அம்பாறை மாவட்டத் தமிழ் - முஸ்லிம் பட்டதாரிகள் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் வழங்குவதாகக் கூறி அறிவிக்கப்பட்டுள்ள 17 ஆயிரம் பட்டதாரிகளில் அம்பாறை மாவட்டத்திற்கென 195 பெயர்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. இதில் 138 பேர் சிங்களப் பட்டதாரிகளாவர்.

கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, சம்பாந்துறை, இறக்காமம், நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேசங்களிலிருந்து மொத்தமாக 14 தமிழ்ப் பட்டதாரிகளினதும் 43 முஸ்லிம் பட்டதாரிகளினதும் பெயர்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் 2004ஆம் ஆண்டுவரை பட்டம் பெற்ற பட்டதாரிகளினதும் பெயர்கள் பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தபோதும் அம்பாறை மாவட்டத்தில் 1996, 1997ஆம் ஆண்டுகளிலிருந்து பட்டம் பெற்ற பட்டதாரிகளினது பெயர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

பட்டதாரிகள் நியமனத்தில் கூட அரசியல் நுழைந்துவிட்டதை இது அப்பட்டமாகக் காட்டி நிற்கின்றது.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் இந்த மாவட்டத்தில் இருந்தும், நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதைப் பற்றிப் பேசுவதற்கும் குரல் கொடுப்பதற்கும் எவரும் இல்லாத நிலையுள்ளது.

அம்பாறை மாவட்ட புறக்கணிப்பைக் கண்டித்தும் இது பற்றி அரசியல்வாதிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் படித்த உயர் பீடங்களுக்கும் உணர்த்தவுமே இன்றைய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். - இவ்வாறு அந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயன்

## இருண்ட யுத்தம் இப்போது வெளிச்சத்துக்கு

கிழக்கில் கருணா குழுவை வைத்துக்கொண்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஓர் இருண்ட யுத்தத்தை நடத்தி வந்தது இலங்கை அரசு. இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த இருண்ட யுத்தத்தின் இரகசியங்கள், இருள் விலகியதால் அம்பலமாகத் தொடங்கிவிட்டன.

புலிகளுக்கு - தமிழ்மக்களுக்கு - எதிராக, குறிப்பாகக் கிழங்கிலங்கையில், தொடுக்கப்பட்ட இந்த இருண்ட யுத்தத்தைச் சில ஊடகங்கள் 'நிழல் யுத்தம்', 'பனிப்போர்' என்றெல்லாம் வர்ணித்தன. ஆனால், அது தவறு.

'நிழல் யுத்தம்' என்றால் நேரடியாக யுத்தம் நடக்கவில்லை, நிழல்கள் மோதுகின்றன, உண்மைப் போருக்கான முன்னேற்பாடு என்றெல்லாம் அர்த்தம் கொள்ளலாம்.

நிழல்கள் மோதினால் அழிவுவராது ஆனால், நிழல்களுக்குரிய நிஜங்களிடையே பதற்றம் வரலாம்.

கிழக்கில் இடம்பெற்றுவந்தது நிழல் யுத்தம் அல்ல. நிஜ யுத்தம். அழிவுகள், உயிரிழப்புகள் ஏற்பட்டன. ஆனால், அந்த அழிவுகளையும், நாசங்களையும் செய்த எதிரீ தான் யார் என்பதையோ, எங்கிருந்து செயற்படுகின்றான் என்பதையோ, எப்படித் தோன்றித் தாக்குகின்றான் என்பதையோ அடையாளப்படுத்தாமல் மறைந்திருந்து அட்டூழியம் புரிந்து வந்தான். முகம்தெரியாத எதிரியுடன் இருளில் மோத வேண்டியவர்கள் போலானார்கள் புலிகளும் ஈழத்தமிழர்களும்.

ஒளிந்து, மறைந்திருந்து, தன்னை வெளிப்படுத்தாமல் எதிரீ புரிந்த இருட்டு யுத்தத்தின் மீது இன்று ஒளிவெள்ளம் பாய்ச்சப்பட்டு விட்டது.

கருணாவும், அவரது சகாக்களும், அவர்களுக்கு தோள் கொடுத்தோரும், பின்னணியில் நின்று இயக்கியோரும் அம்பலமாகிவிட்டனர்.

இருட்டு யுத்தத்துக்குக் கருணாவுடன் சேர்ந்து திட்டம் தீட்டியோர், செயற்பட்டோர் முதல் அச்சதி நாசப்பணிகளில் முக்கியமாகப் பங்களித்த நபர்கள் வரை பலரும் இப்போது விடுதலைப் புலிகளிடம்.

இதுதவிர, புலனாய்வு இருட்டில் ஊடுருவிய புலிகளின் உளவுப் பிரிவும் கனகச்சிதமாகத் தனது கைவரிசையைக் காட்டியுள்ளது.

இதனால், இருண்ட யுத்தத்தின், அந்தகாரமான பகுதிகள் இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டன.

நிலைமை இவ்வாறு மாறிவருவதன் விளைவுகளை நாளாந்தச் செய்திகளாகப் பார்க்கிறோம்.

கருணா சிங்கப்பூர் சென்று திரும்பியதற்கான விமானப் பயணச் சீட்டு விவரம் வரை பல தகவல்களும் புலிகளுக்கு அத்துப்படி எனத் தெரிகின்றது.

அரசு - கருணா தேன்நிலவின் பின்னணி விவரங்கள் புலிகளுக்கு மட்டுமல்ல. சர்வதேச - இராஜதந்திர - மட்டங்களுக்கும் தெளிவாக விளங்கி வருகின்றன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அமைதிமுயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேத்தரப்புக்கு, கருணா அணியை வைத்து இலங்கை அரசுத்தரப்பு புரியும் தகிடுதத்தங்களைப் புலிகள் புட்டுப் புட்டு வைத்திருக்கின்றனர் என்றும் தகவல்.

புலிகளைப் பொறுத்தவரை - புலிகள் இயக்கத்தையும் தமிழின வழிகாட்டியும், அந்த இயக்கத் தலைவருமான பிரபாகரனையும் பொறுத்தவரை - இன்றைய் நிலையில் கருணா அப்படி ஒன்றும் அதீத முக்கியத்துக்குரிய நபர் அல்லர். கருணா விவகாரமும் - தென்னிலங்கை ஊடகங்கள் வெறுமனே ஊதிப் பெருப்பித்துக் காட்டுவதுபோல - புலிகளுக்கு ஒன்றும் 'தலையிடி' தரும் விடயமும் அல்ல. இன்றைய நிலையில் புலிகளுக்குக் கருணா ஓர் அற்ப துரும்பே.

தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவன் கைக்குக் கிடைத்த சிறு துரும்பைப் பற்றியாவது மிதிக்க முனைவதுபோல கருணா விடயத்தைப் பிடித்துக்கொண்டு தேற முனைந்து, இப்போது தத்தளிக்கின்றது அரசு.

புலிகளைப் பொறுத்தவரை கருணா விவகாரம் மிக அற்பமானது என்றால் அந்த விடயத்தை புலிகள் தூக்கிப் பிடிப்பான் ஏன் என்றதொரு கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

அதற்குக் காரணம் உண்டு.

கருணா விடயத்தை இலங்கை அரசு கையாளும் முறை, அமைதி முயற்சிகளில் - சமாதான நடவடிக்கைகளில் - அதன் உண்மையான சொரூபத்தைப் படம்பிடித்துக் காட்டப்போதுமானது என்பதுதான் புலிகளின் கருத்து.

சமாதான முயற்சிகளில் இலங்கை அரசுக்கு உண்மையான அக்கறையோ நேர்மையான ஈடுபாடோ இல்லை. அது, இது விடயத்தில் இரட்டை வேடம் போடுகின்றது. கருணாவை வைத்துக் கிழக்கில் புலிகளைப் பலவீனப்படுத்திய பின்னர் புலிகளோடு பேச்சுக்குப் போகலாம். அடிமை நிலையில் புலிகளைப் பேச வைக்கலாம் என்றெல்லாம் சிங்களம் கனவுகாண்கின்றது.

சமாதான முறைகளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்த அரசுக்கு உள்ள ஈடுபாட்டை - உண்மைச் சொரூபத்தை - சர்வதேச உலகுக்கு அம்பலப்படுத்தவே கருணா விடயத்துக்குப் புலிகள் தரப்பு முக்கியத்துவம் கொடுத்தது.

இருள் விலகுகிறது உண்மை அம்பலமாகின்றது. இலங்கை அரசின் சதித்திட்டம் சர்வதேச உலகுக்கே வெட்டவெளிச்சமாகி வருகின்றது.

இதனால் தமிழரின் விடுதலைப் போராட்ட விவகாரத்தில் சர்வதேச கணிப்பு இப்போது திசைமாறத் தொடங்கியிருக்கின்றது.

அற்ப அரசியல் அதிகாரத்துக்காகத் தென்னிலங்கைச் சிங்களம் பேரினவாதக் கூச்சலை மீண்டும் கிளப்பி, சமாதான முயற்சிகளைப் பின்தள்ளியிருப்பதும் சர்வதேச ரீதியில் தமிழருக்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவித்து வருகின்றது.

# பட்டதாரிகள் நியமனத்தில் முறைகேடு ஏற்பட உள்ளூர் அரச அலுவலர்களே காரணமா?

## நிதி அமைச்சின் செயலாளர் கூறியதாகத் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.2

வேலையற்ற பட்டதாரிகள் நியமனத்தில் முறைகேடுகள் ஏற்பட்டமைக்குப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சில அலுவலர்களின் அக்கறையின்மையே காரணம்.

- இவ்வாறு நிதி அமைச்சின் செயலாளர் கூறினார் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

அரச நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட பட்டதாரிகள் எதிர்நோக்கும் பாதிப்புகளை விளக்குவதற்கான முக்கிய கலந்துரையாடல் நேற்று யாழ். நகரில் உள்ள டி.எம்.ஐ. மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுமபோதே மேற்கண்ட தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது ஆட்சிப்பீடம் ஏறியுள்ள அரசு கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசதுறைகளில் வேலைவாய்ப்பு வழங்குவதாக வாககுறுதி அளித்திருந்தது. அந்த வாக்குறுதியைச் செயற்படுத்த அரசு முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கது. அதன் பிரகாரம் அரசினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எமது கோரிக்கைகள் முற்றாக நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வேலையில்லாப் பிரச்சினை பெரும் பூதாகாரமாக உருவெடுத்துள்ள தற்போதைய சூழ்நிலையில் குறைந்த தொகையினருக்கு நியமனம் வழங்க அரசு முன்வந்துள்ளமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையே தருகிறது.

குறிப்பாகக் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் இந்த நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. நாம் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு ஒன்றை உருவாக்கி அழுத்தம்கொடுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

பிரதேச செயலகங்களில் உள்ள சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலேயே இந்த நியமனங்கள் வழங்குவதில் குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன என்று நிதி ,அமைச்சின் செயலாளரை நாம் சந்தித்துப்பேசிய போது அவர் எம்மிடம் தெரிவித்தார்.

பட்டதாரிகள் நியமனத்தில் அரசு எமக்கு எழுத்து மூல உறுதிமொழியை வழங்கவேண்டும். அதற்காக நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் நாம் குரல்கொடுப்போம்.

நாளை நடைபெறும் பட்டதாரிகளின் அடையாள மறியற்போராட்டத்தைக் கவனத்திலெடுத்து அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். தவறும்பட்சத்தில் பட்டதாரிகள் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் நாம் உறுதுணையாக நின்று செயற்படுவோம்.

- என்றார் சிவாஜிலிங்கம்.

(ஐ-5)

# கிளிநொச்சிப் பட்டதாரிகள் புறக்கணிப்பு; நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராமுகம்

## பாதிக்கப்பட்டோர் குற்றச்சாட்டு

வட்டக்கச்சி,ஓக.2

அரசினால் தற்போது வழங்கப்பட்டு வரும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகளில் கிளிநொச்சி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள மௌனம் சாதிககின்றனர் என்று வேலையற்ற பட்டதாரிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டமும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்குள்ளேயே வருகின்றபடியால் தமது நியமனங்கள் தொடர்பாகவும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டோர் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இதுவரை வெளியான பட்டதாரிகள் நியமன விவரப்பட்டியலில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் கூட இடம்பெற்றிருக்கவில்லை என்பது தெரிந்ததே. இதேவேளை -

இன்னும் சில நாள்களில் தமது நியமனம் தொடர்பாகச் சாதகமான முடிவு கிடைக்காதபட்சத்தில் வெகுஜனப்போராட்டங்களை நடத்தத் தீமானித்திருப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்திருக்கின்றது.

(4-405)

# சுழிபுரம் கரையோரத்தில் கடல் அரிப்பை தடுக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## பிரதேச செயலருக்குக் கடற்றொழிலாளர்கள் சங்கம் மகஜர்

வலி.மேற்கு,ஓக.2

சுழிபுரம் கடற்றொழிலாளர் சங்கத்தினர் கரையோரப் பிரதேசத்தைக் கடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி மகஜர் ஒன்றை வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸிடம் கையளித்துள்ளனர்.

சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் கடற்றொழில் பரிசோதகர் ஊடாக பின்வரும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

★ புளியந்துறை வடக்குப் பிரதேசத்தில் கடல் அரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனால், சுழிபுரம் பகுதி குடியிருப்பைப் பாதுகாக்கவும் குடியேற்றத்திட்டப் பிரதேசத்தைப் பாதுகாத்து அடித்தள நன்னீரையும் கடலரிப்பையும் தடுக்குமுகமாக கடல்நீர் உட்புகாவண்ணமும் மழைநீர் வெளிச்செல்லாவண்ணமும் ஏற்றவகையில் கரையோரப் பாதுகாப்பு அணைக்கட்டுகளை அமைக்கவேண்டும் -

★ இப்பிரதேசத்தில் மணல் அகழ்வைத் தடுத்தல் -

★ தற்காலிக மழைநீர் சேமிப்புக் குளங்களை அமைத்தல் -

★ மணலரிப்பைத் தடுக்கும் முகமாக திட்டமிட்ட வகையில் சவுக்கு உட்பட கண்டல் மரங்களை நடுகைசெய்தல் -

★ மண்ணை வளமாக்கும் முகமாகத் கடற்றொழிலாளர் குடியிருப்புகளை ஏற்படுத்துதல் -

★ கடல் வற்றுக்காலங்களில் படகுகளை கரைசேர்க்க அப்பகுதியை ஆழமாக்குதல் அல்லது தொடுவான் அமைத்தல் -

★ படகுகளைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் இறங்குதுறை துறைமுகம் அமைத்தல் -

★ வெளிச்சவீடு அமைத்தல் -

★ இளைப்பாற்று மண்டபம் ஒன்றை அமைத்தல் -

★ படகு இயந்திரம் பழுதுபார்க்கும் நிலையம், எரிபொருள் நிலையம் அமைத்தல் -

★ கடற்பெருக்குக் காலங்க[illegible] படகுகளைப் பாதுகாக்கும் முகமாக அப்பிரதேசத்தைச் சூழ அணைக்கட்டு[illegible]களை ஏற்படுத்தல் -

★ கடற்றொழிலுக்குச் செல்வோருக்கு ஏற்ற உணவு, உபகரணம், பாதுகாப்பு, மூலப்பொருள்கள் விற்பனை நிலையம் அமைக்கச் சங்கத்திற்கு உதவியும் அனுமதியும் வழங்கல் -

மேற்கண்ட கோரிக்கைகள் அந்த மகஜரில் இடம்பெற்றுள்ளன.

(ஐ-175)

# ஜனாதிபதி விருதுக்கான கலாசாரப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.2

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் ஜனாதிபதி விருதுக்கான கலாசாரப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் 17 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளலாம்.

இதில் 22 போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இப்போட்டியில் கலந்துகொள்பவர்கள் தனியாகவும் குழுவாகவும் போட்டிகளில் பங்கேற்கமுடியும்.

குறுநாடகம், பரதநாட்டியம், கிராமிய நடனம், இளம்பாடகர் (புதிய பாடல்), கிராமியப் பாடல், நிர்மாணிப்பு நடனம் (குழு), இஸ்லாமிய கீதம் (தனி), இஸ்லாமிய கவிதை, சாஸ்திரிய பாடல் (தனி), சாஸ்திரிய வாத்தியம் (தனி), மேற்கத்திய வாத்தியம் (தனி), அறிவிப்பாளர், பேச்சு, கவிதை, சிறுகதை, பாடல் இயற்றுதல், கட்டுரை, சிறுவர் இலக்கியப் படைப்பு, தொலைக்காட்சி நாடகப் பிரதியாக்கம், சித்திரம், சிற்பம், புகைப்படக்கலை ஆகிய போட்டிகளே நடத்தப்படவுள்ளன.

(4-6-405)

**நாளை**

ஆடி 19
செவ்வாய்க்கிழமை
(03.08.2004)
திதி : திருதியை
முன்னிரவு 7.33 வரை.
நட்சத்திரம் : சதயம்
பிற்பகல் 1.45 வரை.
சுபநேரம்: 10.34 - 12.04
ராகுகாலம்: 3.04 - 4.34
(பழைய நேரப்படி)

# புலமைப்பரிசில் கொடுப்பனவின் வருமான எல்லை திருத்தியமைப்பு

வட்டக்கச்சி,ஓக.2

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, மாணவர் உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் புலமைப் பரிசில்தாரரின் பெற்றோர் மற்றும் சட்டபூர்வமான பாதுகாவலரின் வருடாந்த வருமான எல்லை 24 ஆயிரம் ரூபாவாக திருத்தியமைக்கப்பட்டடுள்ளது.

இம்மாற்றம் 2003 ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2003 ஜனவரிக்கு முன் 6 ஆயிரம் ரூபா வருட வருமானம் பெற்றவர்களின் வருமானம் அதன் பின் 24 ஆயிரம் வரை அதிகரித்தாலும் அவர்கள் உதவிப்பணம் பெற உரித்துடையவர்கள்.

ஆனால் 2003ஆம் ஆண்டிற்கு முன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது உதவிப்பணம் பெறாதவர்களுக்குத் திருத்தத்தின் மூலம் உதவிப் பணம் பெற்றுக்கொள்ள முடியாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மூலம் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(4-405)

**உதயவாக்கு**

பிறர் நகைப்பர் என்பதற்காக உனது முயற்சிகளைக் கைவிட்டு அதனால் வருத்தமடையாதே.

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004

### மாதிரி வினாத்தாள் இல.06

### விடைகள்

### வினாத்தாள் I

01) -- 02) - 03) 374, 824 653, 752
04) 3 05) 3 06) 3 07) 2
08) 1 09) 4 10) X 11) ✓
12) அபிராமி 13) தக்ஷா
14) 2 15) 3 16) 1 17) 2 18) 20 19) 10
20) 4 21) 2 22) 4 23) 3 24) 4
25) KJL 26) NOP 27) 3
28) 1 29) 4 30) 2 31) 3 32) 3
33) 1 34) 3 35) 1 36) 3
37) 2 38) 2 39) II 40) I

### வினாத்தாள் II

(1)
01) இராப்பொழுதில்
02) விண்மீன்கள்/நட்சத்திரங்கள்
03) சந்திரனை/பிறைச்சந்திரனை
04) வானம் 5) ஆம்பல்
06) தாமரை
07) மனம்
08) மலர்ச்சி
09) பூமி
10) -(11) ஓடி, வாடி, கண்டு
12) மீன்+இனம்
13) ஓடம்+ஒன்று
14) Sky
15) Sea
16) Mother
17) Moon

02)
01) 2 02) 3 03) 1 04) 3

03) 01) 11500g 02) 140ரூபா 00சதம்
03) 72ரூபா 00சதம் 04) 30ரூபா 00சதம்
05) 30ரூபா 00சதம் 06) 250g
07) 30ரூபா 60சதம்
08) ஆயிரத்து எழுநூற்றைம்பது ரூபா
09) Kg 10) m

04) 01) ✓
02) ✓
03) ×
04) ✓
05) ×
06) ✓

05) 01) கவ்வாத்து 02) தூக்குக்குண்டு
03) பற்சில்லு 04) எரிபொருள்
05) மின்உற்பத்தி

06) 01) 132
02) 4
03) 1.4
04) 3
05) பி.ப.1.15

07)
01) நுளம்புத்திரி
02) கஸ்பர்வீல்
03) உடல்ஒலிபெருக்கி
04) வெசாக்கூடு
05) ஒலிபெருக்கி

08)
01) புரதம் - ✓
02) கொழுப்பு - ✓
03) புரதம் - ✓
04) மாப்பொருள் - ✓
05) விற்றமின் - ✓

09) 01) இலை
02) வித்து
03) கிளை

10) 01) Eye
02) Ear
03) Nose
04) Mouth

11) 01) ✓
02) ×
03) ×
04) ×

12) 01) கதிரை 02) புத்தகங்கள்
03) மேசை 04) கரும்பலகை
05) துணி 06) போத்தல்கள்

13) අම්මා

14) பொருத்தமான எதிர்கால வாக்கியங்கள்

### புள்ளித்திட்டம்

வினாத்தாள் I

40x2½= 100 புள்ளிகள்

வினாத்தாள் II

| | |
|---|---|
| 01) | 17 புள்ளிகள் |
| 02) | 04 புள்ளிகள் |
| 03) | 18 புள்ளிகள் |
| 04) | 06 புள்ளிகள் |
| 05) | 05 புள்ளிகள் |
| 06) | 10 புள்ளிகள் |
| 07) | 05 புள்ளிகள் |
| 08) | 05 புள்ளிகள் |
| 09) | 03 புள்ளிகள் |
| 10) | 04 புள்ளிகள் |
| 11) | 04 புள்ளிகள் |
| 12) | 06 புள்ளிகள் |
| 13) | 01 புள்ளிகள் |
| 14) | 12 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

### சிங்கப்பூருக்குக் கூட்டிச்சென்றேனா

# கருணாவைக் கண்டதேயில்லை அடித்துக் கூறுகிறார் அனுரா!

கொழும்பு,ஓக.2

கருணாவுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. கருணாவை நான் கண்டதும் இல்லை. பேசியதும் இல்லை. அரசியல் இலாபம் கருதி - எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காகவே - நான் கருணாவைச் சிங்கப்பூருக்கு அழைத்துச்சென்றேன் எனக் கதை கட்டிவிட்டுள்ளனர். இது ஐ.தே.கட்சியினரின் திட்டமிட்ட ஒரு சதிச்செயல்.

- இப்படிக் குற்றம் சுமத்துகின்றார் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க.

உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க நாட்டில் இல்லாத வேளையில் - அவர் வெளிநாடு செல்லும்போது கருணாவையும் அவரது குடும்பத்தவர்களையும் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றார் என்ற - ஒரு செய்தி வெளியானது.

இச்செய்தி நாடாளுமன்றத்திலும் அரசியல் வட்டாரங்களிலும் பெரும் பரபரப்பாகப் பேசவும் பட்டது.

சீனாவுக்குச் சென்றிருந்த அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க நாடு திரும்பியதும் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்து இவ்விடயம் தொடர்பாக விளக்கம் அளித்தார்.

உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ்விவகாரம் தொடர்பாக விளக்கம் அளித்த அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க அங்கு கூறியதாவது:-

நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயங்கரவாதிகள் தொடர்புகளை வைத்துக்கொள்ள விரும்பாதவன். இந்தக் கருணா என்ற மனிதனை நான் கண்டதும் இல்லை; காண முயற்சித்ததும் இல்லை; காண விரும்பவும் இல்லை. இந்த மனிதனை நான் ஏன் சிங்கப்பூருக்கு அழைத்துச்செல்லவேண்டும்? இப்படியான ஆளகளை நான் காக்கைதீவுக்குக் கூட அழைத்துச் செல்லமாட்டேன்.

ஆனால், ஐ.தே.க. ஆதரவுப் பத்திரிகைகளில் சில நான் கருணாவை சிங்கப்பூருக்கு அழைத்துச்சென்றேன் எனவும், கருணாவுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளேன் எனவும் உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இதனைக் கூறினார் எனவும் அவை குறிப்பிட்டுள்ளன. இதில் எந்த உண்மையும் இல்லை.

இது ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசியல் ரீதியாக எனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் திட்டமிட்டுத திரித்துவிட்ட ஒரு செய்தி. எனக்கும் கருணாவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை - என்றார்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சித் தரப்பின் வேட்பாளர் யார் என்று அனுரா பண்டாரநாயக்காவிடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தவேண்டி வருமா என்பது உறுதியாகவில்லை. அதற்கு முன்னர் அரசமைப்பு மாற்றப்பட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையே ஒழிக்கப்படலாம். அப்படி இடம்பெறாவிட்டால் இன்னும் ஒரு வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும். அப்போது பொருத்தமான - வெற்றிபெறக்கூடிய - வேட்பாளர் யார் என்பதைக் கட்சி தீர்மானித்து அவரை வேட்பாளராக நிறுத்தும்.

அப்போது மக்கள் சரியான தெரிவைத் தீர்மானிப்பார்கள். தனியார் ஊடகங்கள் அதனைத் தீர்மானிக்கமாட்டா - என்றார் அனுரா.

சமாதான முயற்சிகள் விடயத்தில் அரசுக்கு ஆதரவளிக்க ஐ.தே.கட்சி முன்வந்திருப்பது குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

ஐ.தே.கட்சியின் ஆதரவு எங்களுக்குத் தேவையில்லை. இந்தக் கூட்டமைப்பு உடையாது. இந்த அரசு நீடிக்கும். ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ.ல.சு.கட்சி ஆகியவை இருக்கும்வரை - நான் இருக்கும் வரை - அமைச்சுப் பதவியில் நான் நீடிக்கும்வரை - இக்கூட்டுத் தொடரும்.

எங்களது அரசின் பெரும்பான்மையை வரவு - செலவுத் திட்டத்தின்போது நிரூபிப்போம் - என்று பதிலளித்தார் அனுரா.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பையா சின்னம்மா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி சுப்பையா சின்னம்மா 31.07.2004 சனிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் மறவன்புலவைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (கனடா), மகேந்திரம் (உரும்பிராய்), மாணிக்கவாசகர் (உரும்பிராய்), மனோரஞ்சிதம் (உரும்பிராய்), சிவபுண்ணியம் (கனடா), மகேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரி (விக்கி - கனடா), லதா (கனடா), வசந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேலாயுதபிள்ளை (கனடா), கமலாதேவி (கனடா), பரமேஸ்வரி (உரும்பிராய்), இராசரத்தினம் (உரும்பிராய்), இன்பமாலா (கனடா), நவமலர் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), சிவனேஸ்வரலிங்கம் (கனடா), சிவமாலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, சுப்பிரமணியம், ரங்கமணி புனிதரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2004) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(34801) (33-13-16)

தகவல்:
இராசரத்தினம்
(மருமகன்)

### செல்லப்பா திருச்செல்வம்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா திருச்செல்வம் அவர்கள் நேற்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் லோகாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் பாக்கியம் சிவசோதிராஜா, பரிமளம், தெட்சணாமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமாரி (London), பத்மநாதன் (Canada), பகீரதன் (Canada), இரத்தினகுமாரி (Canada), ஜெயக்குமாரி (ஜேர்மனி), ஜெயகரன் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பரமசிவம், பவளராணி, அனுஷா, அருட்செல்வன், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தருமராஜா, அருளாம்பிகை, லில்லி ஆகியோரின் மைத்துனனும் சிவசுப்பிரமணியத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2004) திங்கட்கிழமை முற்பகல் 10.00 (ப.நே.) மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருளன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(34797) (33-13-16)

தகவல்:
தி.பகீரதன் (மகன்)

### சந்தியாகு இராயப்பு



மெலிஞ்சிமுனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாகு இராயப்பு அவர்கள் நேற்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாகு - மரியாம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவரான இராயப்பு றீற்றாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்தியான் சவிராசி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சுவக்கீன், குருசுமுத்து, தங்கமுத்து, பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான யாக்கோபு, வைத்தியான் அடைக்கலம் மற்றும் மரியநாயகம் மலர், தங்கம் ஆகியோரின் மைத்துனரும் சவிரிமுத்து, தோமஸ், சவிரியான், விக்ரோரியா ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற செபமாலைமுத்து மற்றும் ராயர், காணிக்கைமுத்து, தவம், (ஜேர்மனி), நித்தி (நோர்வே) சகாயமுத்து (ஜேர்மனி), ராசா (நோர்வே), மார்க்கு (சுவிஸ்), அஞ்சலினா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் பூராசா, அன்ரன் (ஜேர்மனி), சந்திரா, சுசிலா (பிரான்ஸ்), மறிற்றா (நோர்வே), குமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் விஜிதா, இதயன், டில்ஷா, டில்ஷன், லூட்சலா, கௌசலா, அன்றூட், ஜீவொளி, தனுஷா, மயூரி, ஆதித்தன், நிதர்சனா, மர்லின் றீற்றா, அனோஜ், பேரன்ஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(34800) (33-13-16)

தகவல்:
பிள்ளைகள்

## வலிகாமம் கல்வி வலய ஆங்கிலதினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.2

வலிகாமம் கல்வி வலய மட்ட ஆங்கில தினப்போட்டிகள் இன்று முதல் நாளைமறுதினம் புதன்கிழமை வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் சிரேஷ்ட மாணவ பிரிவுகளுக்கான கவிதை, நாடகம், உரை நாடகம் என்பனவும்-

நாளை காலை 9 மணிமுதல் ஒரு மணி வரை சகல பிரிவுகளுக்குமான குழுப் பாடல் போட்டியும்- பிற்பகல் 1.30 மணி முதல் அதே பிரிவுகளுக்கான சொல்வதெழுதல், பிரதி பண்ணல், கட்டுரை ஆக்கம் ஆகிய போட்டிகளும் -

நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நாடகமும் 10.30 மணிமுதல் ஒரு மணிவரை கீழ்ப்பிரிவுக்கான நாடகமும் நடைபெறும்.

அன்று பிற்பகல் 1.30 மணி முதல் மூன்றாம் வகுப்பு தொடக்கம் 11ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான பாவோதல் மற்றும் மேற்பிரிவிற்கான பேச்சுப் போட்டி என்பனவும் நடைபெறும். (4-6-152)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1 முதல் O/L வரை ஆங்கிலத்துடன் முக்கிய பாடங்களும். சிறந்த ஆசிரியர்கள்.
பதிவுக்கு: தலைமை ஆசிரியர், 426(302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (34799)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3673778 இலிருந்து 3686673 வரை

சீட்டிழுப்பு இல. 1526 திகதி 31.07.2004

வெற்றி எண்கள்

**03 10 29 32 56**

போனஸ் எண் **50**

ஜக்பொட் பரிசு ரூபா.23,81,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 23,81,750/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 1 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 72 | 10,000/- | 7,20,000/- |
| 3 | 4,037 | 500/- | 20,18,500/- |
| 2 | 67,134 | 20/- | 13,42,680/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 82,824 | 10/- | 8,28,240/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 50,09,420/-

**Rs. 30,21,150/-**

தொடர் இல. 2733743 க்கு மேற்பட்ட வாரா திற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 04 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3684543-7-31
3681881-3-92
3681357-0-73
3676603-0-79
3676279-0-32

# சமுதாயத்தின் பரிமாணங்களை வெளிப்படுத்திய ஓவியங்கள்

எஸ்.தக்சாயினி
(யாழ்.பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை கலைவட்டம் மாணவர்களால் நடத்தப்பட்டுவருகின்ற முதிசம் எனும் நிகழ்ச்சித் தொடரிலே இம்முறை 'யாழ்ப்பாணத்தின் 13 ஓவியர்களின் ஓவியங்கள்' எனும் கண்காட்சி நிகழ்த்தப்படுகிறது.

இக்கண்காட்சியில் யாழ்ப்பாணத்து 13 ஓவியர்களின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. எம் மண்ணில் உதித்து ஓவியக் கலையுலகில பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற கலைஞர்களையும் அவர்கள் அனுபவித்து உணர்ந்த அவர் தம் படைப்புகளையும் வெளியுலகுக்கு - ஒரே கூரையின் கீழ் அளிப்பதில் இக்காட்சிப்படுத்தல் பெரும் பங்காற்றுகிறது.

இந்த ஓவியர்கள் தாயகத்தில் பிறந்து தாய் நாட்டிலோ அல்லது அந்நிய நாட்டிலோ சமகாலத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். இவர்கள எங்கு வாழ்ந்தாலும் தமது ஓவியங்களில் தாய மண்ணின் வாசனையை வெளிப்படுத்தியுள்ளனர். அதற்கு அவர்கள் தாய்மண்ணின் மீது கொண்ட பற்றுதலே காரணம் எனலாம்.

இக்கலைஞர்களின் கையாள்கைகளின் உட்பொதிகைகள் யாவும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தினையும் சமூகத்தினையும் சல்லடை போடுவதாய் உள்ளன. அதாவது யாழ்ப்பாண சமூகத்தின் அனுபவங்களின் விம்பங்களாகவே இந்த ஓவியங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

கலைஞன் ஒருவன் சமூகத்தில் வாழ் பவனாகவே காணப்படுகின்றான். அதுமட்டு மல்லாமல் அவன் காலத்திற்கும் வெளிக்கும் தன்னை உட்படுத்திக்கொள்கின்றான்.

எனவேதான் காலமும் சமூகப் பிரதிபலிப்புகளும் அவனது படைப்புக்களின் வெளிப்பாடுகளில் பரிணமிக்கின்றன.

யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரதிபலிப்புகளாக இடம்பெயர்வு, பாலியல் வல்லுறவு, கொலை, வன்செயல், மிதிவெடி அச்சுறுத்தல், திருவிழாக்கள், பாரம்பரிய கலைகள், இயற்கைக் காட்சிகள், போர் அனர்த்தங்கள், பெண் அனுபவங்கள், தாய மண் மீதுள்ள பற்றுகள், மக்களின் ஏக்கங்கள் என்று பல்வேறுபட்ட கோணங்களில் இந்த ஓவியங்கள் இவர்களால் வெளிப்படுத்தப்பட்டன.

அந்தவகையில் அவர்களின் ஓவியங்களின் பக்கம் திரும்பின், ஓவியர் ஜீவன் என்பவர் தாயகக் கடிதங்கள், சுவடுகள், கலைச்சின்னங்கள் என்பவற்றை தனது வெளிப்பாட்டில் கொண்டு வந்திருக்கின்றார். அதேபோல் அனுசியா என்ற ஓவியரும் தனக்கும் தாயகத்திற்கும் உள்ள தொடர்பு முடிவுறாது அது தொடர்ச்சியான உறவு என்பதனை மிகவும் வேறுபாடான நிலையில் கோடுகள், நிறங்கள் மூலம் அதிசயமாக படைத்துள்ளார்.

ஓவியர் வாசுகி என்பவர் தாய் நாட்டு உறவுகளுடன் தொடர்புகொள்ள முடியாத நிலையை - கிருஷாந்தி படுகொலையை - எதிர்கால சமூகம், வன்முறை, அடக்குமுறையிலிருந்து எவ்வாறு பிரகாசிக்கவேண்டும் என்பதை தனது ஓவியத்தின் மூலம் மிகவும் துல்லியமாக கையாண்டுளளார் கனகசபை என்பவர் கிராமியச் சூழல், இயற்கையின் சித்திரிப்பு, திருவிழாக்கள் என்பவற்றை தனது உள்ளடக்கமாக கையாண்டுள்ளார்.

இராசையா என்பவர் யாழ்ப்பாணச் சூழல், நீர்வளம், விவசாயத் தன்மை என இயற்கையின் ஆற்றலை பிரதிபலிப்பதாய் தனது ஓவியத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வைதேகி என்ற ஓவியரும் பெண் அனுபவம், மக்களின் முகம் என்பது அடையாள அட்டைகுள் அடக்கப்படுகின்றது என்பதையும் அவ்வாறே



நிலாந்தன் என்ற ஓவியர் தனது பிள்ளையார் என்ற கருப்பொருளில் யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய தனது பார்வையை பல்வேறு திசையில் நோக்கியுள்ளார். ராஜரட்ணம் என்ற ஓவியர் மெயயுரு என்ற நிலையில் கலைஞனும் சமூகத்தில் ஒருவன் என்ற தன்மையை உள்வாங்கியுள்ளார். அருந்ததி என்பவர் உயிர்ப்புக்கொண்ட அடுப்படியை தனது ஓவியம் மூலம் பேசுகின்றார்.

ஓவியர் கைலாசநாதன் என்பவர் பழையனவற்றை ஞாபகப்படுத்தல், இடம்பெயரும் அவலம் என்பவற்றை கையாண்டுள்ளார். சிவரூபன் என்பவர் இயற்கை மீதுள்ள ஆறாக்காதலை கனவுலகாகவும் அதில் மனிதன் என்பவன் சிறியவன் என்பதையும் நோக்கியுள்ளார். அதாவது முடிவில் என்ற தன்மையை மிகவும் உன்னதமாக இவர் கையாண்டுள்ளார். அவ்வாறே ஓவியர் சனாதனன் என்பவரும் மிதிவெடி அச்சுறுத்தல் என்பது அதன் ஞாபகங்களும் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்படுகின்றது என்பதும் அதன் எதிரொலியை கருவில் கூட உணரமுடியும் என்பதையும் இடப்பெயர்வில் மக்களின் வீட்டு அவலங்கள் தள்ளாடும் இசைகளாகவும் தலைகீழ் நிலையாகவும் விளங்குவதை தனது அனுபவத்தின் வாயிலாக கலைபடைப்பின் மூலம் உயிரூட்டியுள்ளார்.

- இவ்வாறு ஒவ்வொரு படைப்பாளிகளின் சமூகத்தின் ஒட்டுமொத்த அனுபவங்களின் பகிர்வாக - அனைவரும் பார்த்து ரசிக்க வேண்டிய அரிய படைப்பாக இக்கண்காட்சி அமைகின்றது. ★

# பாரம்பரியக் கலைகளின் வீழ்ச்சிக்கு சின்னத்திரையின் ஊடுருவலே காரணம்

## அண்ணாவியார் பாலதாஸ் கூறுகிறார்

சின்னத்திரையின் ஊடுருவல் அதிகரித்து வருவதால் இன்று பாரம்பரியக் கலைகள் அழிவடைந்து செல்கினறன.

எமது சமூகத்தில் ஒருகாலத்தில் உயர் நிலையில் இருந்த நாட்டுக்கூத்துக்கள இன்று பெருமளவில் அருகிவிட்டதற்கும் அதுவே காரணமாகும். இவ்வாறு கூறினார் பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞர் அண்ணாவியார் அன்ரனி பாலதாஸ். கடந்த 56 வருடங்களுக்கு மேலாக நாட்டுக்கூத்துக் கலையில் ஈடுபாடு கொண்டு அந்தக் கலைக்காகத் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து வருபவர் அண்ணாவியார் பாலதாஸ்.




இவரது கலைப் பணியைப் பாராட்டி யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினால் அண்மையில் கலைஞான பூஷணன என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் இந்தக் கலைஞருக்குப் பொன்னாடை போர்த்து பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

### கலைச்சுடர்

தயாரிப்பு: அற்புதன்

கலைச்சுடர் பகுதியில் கலைஞர் பாலதாஸின் செவ்வி ஏற்கனவே முன்பு ஒரு தடவை வெளியாகி யிருந்தது. தற்போது கலைஞான பூஷணன எனற பட்டம் வழங்கப்பட்டதையிட்டு அரவது கலைப்பணியின் பரிமாணங்களை சுருக்கமாக இங்கு தருகிறோம்.

அலைகடல் தாலாட்டுகின்ற பாசெய் ஊரில் (பாஷையூர்) அன்ரனி சிசீலியா தம்பதிகளுககு பத்தாவது மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை பாஷையூர் புனித அந்தோனியார் கலவன் பாடசாலையிலும் மேற்படிப்பினை புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

1948ஆம் ஆண்டு தனது எட்டு வயதில் அண்ணாவியார் ஞானப்பு மடுதீஸ், அண்ணாவியார் தியோகு இராசேந்திரம் ஆகியோரின் நெறியாள் கையில் கண்டி அரசன் நாட்டுக் கூத்தில் குமாரி ஆமியின் மகனாக நடித்ததன் மூலம் இவரது கலைவாழ்வு ஆரம்பமாகின்றது.

1948ஆம் ஆண்டு தனது எட்டாவது வயதிலிருந்து நாட்டுக்கூத்துத் துறையில் ஈடுபட்டுவருகின்றார். நாட்டுக்கூத்து கலையை வளர்க்கும் நோக்குடன் தனது நண்பரான அமரர் கலைவாரிதி அம்புறோஸ் ஜேக்கப் அனடர்சனுடன் இணைந்து 1964ஆம் ஆண்டு பாஷையூர் வளர்பிறை நாடகமன்றத்தை ஆரம்பித்தா.

கண்டி அரசன் நாட்டுக கூத்தில் கண்டி அரசனாக நடித்து நாட்டுக்கூத்து ரசிகர்களின் அமோக பாராட்டினைப்பெற்றார்.

இந்தக் கலைஞருககு 1970ஆம் ஆண்டு கண்டி அரசன் இசைநாடகத்தில் கண்டி அரசனாக நடித்த மைக்காக கலை அரசு சொர்ணலிங்கத்தினால் பாஷையூர் அழகையா முத்தமிழ்கலை அரங்கில் 'இசை நாடக இளங்கோ' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

1993ஆம் ஆண்டு திருமறைக் கலாமன்றத்தினால் "நாட்டுக்கூத்து அண்ணாவியார் என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவில் நாட்டார் பாடல் பாடியதற்காகவும் விழாவில் ஆர்மோனியம் வாசித் தமைக்காகவும் பாராட்டி விசேட சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

2002ஆம் ஆண்டு கலைக்கு ஆற்றிய சேவைக்காக பிரதேச செயலர் செந்தில் நந்தனனால் யாழ். ரத்னா என்ற பட்டம் சூட்டி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். தற்போது இம் மாதம் 12ஆம் திகதி திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற இசைவிழாவில் குச்சிப்புடி நடன நிகழ்வின்போது மன்ற இயக்குநர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளினால் 'கலைஞான பூஷணன் என்ற விருது வழங்கிப் பொன்னாடை போாத்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார். *

தொகுப்பு : தமிழினியன்




வலிகாமம் மேற்கு. கலாசாரப் பேரவையினரால் சங்கானையில் நடத்தப்பட்ட கலாசார விழாவில் இடம்பெற்ற பாடசாலை மாணவிகளின் சுளகு நடனத்தில் ஒரு காட்சி.
(படம்: வலிமேற்குச் செய்தியாளர்)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியால் நடத்தப்பட்ட 'அழகெழல் - 2004' போட்டி நிகழ்வு கடந்த 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் நடனப் போட்டியில் பங்குபற்றிய சிறுவர் நடனக்குழுவினரை முதலாவது படத்திலும், நிகழ்வில் வெளியிடப்பட்ட 'அழகெழல் - 2004' நூலை பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனிடம் இருந்து உப பீடாதிபதிகளில் ஒருவரான க.கமலநாதன் பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். 'அழகெழல்' போட்டி இணைப்பாளர் க.ரட்ணேஸ்வரனும் காணப்படுகின்றார்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

இலக்கம் 2, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் உள்ள 3 பரப்புக் காணியும், சகல வசதிகளுமுள்ள வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: ச.தேவராஜனுடன் தொ.பேசி 021-222-2490 என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும். (சி-36675)

இரண்டு போத்தல் பால் தரக்கூடிய ஜமுனா பாரி ஆடும், மறிக்குட்டியும், சணல் ஆடு ஒன்றும் (சினையுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல.57, கே.கே.எஸ். றோட், (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்), கொக்குவில். (34780)

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாவித்த V.C.R. டெக், துணி துவைக்கும் இயந்திரம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 024-222-4402, 077-3039649, 077-6005478. (34756)

5ஸ்ரீ xxx தொடரிலக்கமுடைய Morris Oxford கார் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குணபாலன் (பவா), பழைய வீதி, கோப்பாய். (34774)

## வீடு விற்பனைக்கு

இளவாலை, பிரதான வீதியில் கோயிலுக்கும் பாடசாலைக்கும் அருகில் 6பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 117, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 0777-222103. (34766)

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அண்டிய பகுதிகளில் வைத்தியசிகிச்சை நிலையம் (கிளினிக்) நடத்தக்கூடிய வீடு/அனெக்ஸ்/அறை வாடகைக்குத் தேவை. பிரதான வீதிகளில் அமைந்திருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு: வி.இ.-2337, மே/பா உதயன். (34600)

## ட்ராக்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
மகேந்திரா 175, DI TRACTOR
WITH TRAILOR
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
021-222-5780
0777-325545
(சி-36667)

## தவறிவிட்டது

S.ஜீவபிரதாப் என்பவரின் சாரதி அனுமதிப் பத்திரம் நவாலிக்கும், கொக்குவிலுக்கும் இடையில் 24.07.2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் ஒப்படைத்துதவவும். (34768)

இல.123, கண்டி வீதி, அரியாலையைச் சேர்ந்த சிவஞானம் ரேவதியின் தேசிய அடையாள அட்டை(இல.606142501V), விசேட அடையாள அட்டை என்பன 27.06.2004 அன்று இலங்கை வங்கிக்கும், யாழ். நவீன சந்தைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். லைடன் புடைவையகத்தில் ஒப்படைத்துதவவும். (34793)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler மற்றும் பேட்டுக் குஞ்சுகள் 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi வட்டுக்கோட்டைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34323)

தரமான Prima Broiler குஞ்சுகள் (விலை 40/-) 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34526)

தரமான பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 04.08.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. (34791)

## கிறிஸ்தவ ஒன்றிய நிர்வாகிகள்

குருநகர்,ஒக.2

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவராக அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த டி.ஆர். அருமைநாயகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் யாழ். சென்.பீற்றர்ஸ் ஆலயத்தில் அருட் பணியாளர் ஜே.ஞானப்பொன்ராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றபோதே இவர் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த அருட்பணிப்பாளர் கே.கருணசேகர செயலாளராகவும், தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த நோயல் விமலேந்திரா பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-51)

## பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வுகளும்

யாழ்ப்பாணம்,ஓக.2

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேசசபை நடத்தும் பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வுகளும் இன்று திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு பிரதேசசபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நடைபெறுகிறது.

மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் பிரான்சிஸ் விக்டர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் செல்வி தெ.து.விஜயலட்சுமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.(4-6-185)


## House Wanted for Rent
## வீடு வாடகைக்குத் தேவை

UNDP இன் அலுவலகப் பாவனைக்கு வீடு வாட்கைக்குத் தேவைப்படுகின்றது.

121, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி (222 2277, 222 5776) இன் மூலமோ அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும். (சி-36651)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 - 06 - 1947



மறைவு
14 - 08 - 2003

அமரர் **நவரத்தினம் கணேசலிங்கம்**

திதி: 02.08.2004

ஆண்டு சுபானு ஆவணி மாதம்.ஐந்து சதயம் தனில்
பாங் கார்ந்து தேய்பிறை துதிதனில் - மாண்புடைய
நவரத்தினம் கணேசலிங்கம் மண்ணுலகை விட்டு
சொக்கனடி சேர்ந்த தினம்.

ஆண்டொன்று ஆயினும்
ஆறாதய்யா நம்துயர்
என்றும் உங்கள் நினைவு
பசுமையாய் எம்முடன்.

உம் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, மகன், மருமகள்,
சகோதரன், மைத்துனிமார்,
பெறாமக்கள்.

தற்காலிக முகவரி:
29, குளப்பிட்டி லேன்,
கொக்குவில்.

(34403)(34-16-13)

## 61ஆவது பிறந்தநாள் நினைவுகளில்

அன்னை மடியில்
02 - 08 - 1943



ஆண்டவன் அடியில்
06 - 01 - 2000

அமரர் **கிறகெறி தங்கராஜா**

(கலைக்கோயில் அதிபர்)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

60/4, சொலமன் லேன்,
யாழ்ப்பாணம்

(34787) (26-34-13-16)

- குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
05 - 05 - 1942



ஆண்டவன் திருவடியில்
06 - 08 - 2001

அமரர் **சின்னக்குட்டி தியாகராசா** (தியாகு)

(முன்னாள் ஒப்பந்தகாரர், நீர்ப்பாசனத் திணைக்களம்,
வவுனிக்குளம், உரிமையாளர், கர்ணன் வாணிபம்)

திதி: 02-08-2004

அன்புடனும் பண்புடனும் ஆதரவாய்ப் பேசியெமை
அகமகிழ வாழ்வளித்த ஐயாவேநீ சென்று
ஆண்டதுவும் மூன்று ஆனதுவோ! உன்நினைவால்
ஆறுமோ! எம்மனம் தேறவில்லையையா'

330, யோகபுரம்,
மல்லாவி.

(34782) (26-34-13-16)

- குடும்பத்தினர்.

## நினைவலைகள்

பதினோராம் ஆண்டு



அமரர்
**சோமநாதபிள்ளை கந்தையா**
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 1918-10-06
மறைவு: 1993-03-05

அன்புடன் அரவணைத்து
அரிய நற்கல்வி புகட்டி
இன்றுலகம் போற்றிட
எமை வளர்த்த அப்பாவே!

14 ஆம் ஆண்டு



அமரர் **கந்தையா ரவீந்திரன்**
(ஆசிரியர், யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம்)

தோற்றம்: 1947-07-24
மறைவு: 1990-08-20

அன்பொடு எமை வழிநடத்தி
ஆலோசனையும் வழங்கி ஆசையோடு
தங்கையென அருகிருத்தி மகிழ்ந்த
என் அண்ணாவே!

4 ஆம் ஆண்டு



திருமதி
**சாரதாம்பாள் கந்தையா**
(திதி: 02.08.2004 துதியை)

தோற்றம்: 1923-07-07
மறைவு: 2000-08-16

நோயுற்ற வேளைதனில் கண்
துடங்காது எமைக் காத்து
அறுசுவை உணவும் அருந்தமிழ்
கலையும் தந்து
அரவணைத்த அருமை அம்மாவே!

ஆண்டுகள் பல கடந்தாலும் நினைவுகளில்
நின்றும் நீங்காது வாழும்:

வேலணை -01.

(34707)(34-16-13)

- குடும்பத்தினர்.

# வன்னியில் உற்பத்தியாகும் நெல்லுக்கு உத்தரவாத விலை!

## பொருண்மிய நிறுவனம் தீர்மானம்

பரந்தன்,ஓக.2

விவசாயிகள் நட்டமடைவதைத் தடுக்கும் முகமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் செய்கை பண்ணப்படும் நெல்லுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிப்பதென்று தமிழீழ பொருண்மி மேம்பாட்டு நிறுவனம் தீர்மானித்திருக்கிறது.




வன்னிப் பகுதி விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகள தொடர்பாக ஆராய்வதற்கென கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், துணைப்பொறுப்பாளர் மதன்ராஜ், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாகப் பொருண்மியப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்ததாவது:-

வன்னிப் பகுதியில் விவசாயிகள் எதிர்நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இதில் ஆராயப்பட்டது.

நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயிக்கும்போது அவற்றின் உற்பத்திச் செலவுகள் முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்படும்.

விவசாய அமைப்புகள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாய உற்பத்தி உத்தியோகத்தர்கள், நெல் கொள்வனவாளர்கள் ஆகியோர் இணைந்து இந்த உத்தரவாத விலையை நிர்ணயிப்பர்.

கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது.

வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியில் மாடுகள் கொண்டு செல்லப்படுவதைத் தடைசெயவதென்றும் - தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், பால் விற்பனையின் போது நிதித்துறையினரால் அறவிடப்படும் விற்பனை வரியை நீக்குவதென்றும் - தீர்மானிக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுப்பதற்காக 01.08.2004 (நேற்று) முதல் 'பொலித்தீன்' பாவனையை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. சிமெந்துப் பைகள், ஓலை என்பவற்றால் பைகளைத் தயாரிப்பதற்குக் கிராமிய அபிவிருத்தி வங்கி கடன்களை வழங்க முன்வந்துள்ளது. இந்த உற்பத்தியைக் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்வோருக்கு உதவிகளைச் செய்வதென்றும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீர்மானித்திருக்கிறது - என்று தெரிவித்தார். (4-352)

## விபத்துக்களைக் கட்டுப்படுத்த காவல்துறை துண்டுப்பிரசுரம்

கிளிநொச்சி,ஓக.2

ஏ-9 வீதியில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தத் தமிழீழக் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினரால் 'உயிர்களையும் உடைமைகளையும் காப்போம்' என்னும் தலைப்பில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் மக்களுக்கு விநியோகிக்கப்படும் இப்பிரசுரத்தில் சாரதிகளுககுப் பல்வேறு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

வாகனங்களின் வேகமான ஓட்டம், சாரதிகளின் பொறுப்பற்ற தன்மை, வீதிப்போக்குவரத்து ஒழுங்குமுறை தொடர்பான அறிவற்ற தன்மை என்பவற்றால்தான் அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுகின்றன என இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4-305)

## முல்லைத்தீவு வலயத்துக்கு ஒரு தொகுதி தளபாடங்கள்

புதுக்குடியிருப்பு,ஓக.2

முல்லை கல்வி வலயத்துக்கு உட்பட்ட சில பாடசாலைகளுக்குப் 'பொதுக்கல்வி நிகழ்ச்சித் திட்டம் II'இன் கீழ் ஒருதொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இத்தளபாடங்கள் செம்மலை மகாவித்தியாலயம், தேவிபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, கைவேலி கணேச வித்தியாலயம் என்பனவற்றுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இத்தளபாடங்கள் கிடைத்ததன் மூலம் ஓரளவு தளபாடக் குறையை நிவர்த்திசெய்ய முடிந்துள்ளபோதிலும் ஏனைய பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவுகிறது என வலயக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (4-202-353)

## இராமநாதபுரம் பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடம் திறப்பு

வட்டக்கச்சி,ஓக.2

இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 'யுனிசெவ்' நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த 8ஆம் திகதி முற்பகல் 11.30மணியளவில் பாடசாலை முதல்வர் ச.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசியக் கொடியினைத் கல்மடு இராமநாதபுரம் வலயப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினைக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பதமநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து புதிய கட்டடத்தை 'யுனிசெவ்' நிறுவனப் பிரதிநிதி பெனிபுறூன் திறந்து வைத்தார். வகுப்பறைகளைக் கிளிநொச்சி வலயக் கல்விப பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்களான கி.சின்னராசா, க.ம.பத்மநாதன், வட்டக்கச்சி பங்குத் தந்தை அகஸ்தீன் அடிகளார் ஆகியோர் திறந்து வைத்தனர். (4-405)



இராமநாதபுரம் அ.த.க. பாடசாலையின் புதிய கட்டடத்தொகுதித் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. 'யுனிசெவ்' நிறுவனப் பிரதிநிதி பெனிபுறூன் அம்மையார் அலுவலகப்பகுதியினைத் திறந்துவைப்பதையும் அருகில் அதிபர் ச.புண்ணியமூர்த்தி நிற்பதையும் வகுப்பறை ஒன்றை வட்டக்கச்சிப் பங்குத்தந்தை அகஸ்ரீன் அடிகளார் திறந்து வைப்பதையும்படங்களில் காணலாம். (படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## மல்லாவியில் சிறப்புற நடந்த சர்வதேச கூட்டுறவாளர் விழா

மல்லாவி,ஓக.2

முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுச் சபை, முல்லை மாவட்டத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்திய 82ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா கடந்த 27ஆம் திகதி மல்லாவி வண்ணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

முல்லை மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம, தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் பொ.இளஞ்சேரன், முல்லை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மோ.சிவமயம், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், துணுக்காய் உதவி அரச அதிபர் திருமதி ப.தியாகராஜா, மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் அ.ஜெறோம், இலங்கைத் தேசியக் கூட்டுறவுச் சபை உப தலைவர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கிடையிலான கூட்டுறவுத்தினப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (4-322)

## கிளிநொச்சி வலயத்தில் 92 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

வட்டக்கச்சி,ஓக.2

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடமைபுரியும் 92 ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இடமாற்ற உத்தரவுகள் நேற்றுமுதல் செயற்படும்படியாகச் சம்பந்தப்பட்டோருக்குத் தனித்தனியே கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுள்ள சிலருக்கும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (405)

## இராமநாதபுரத்தில் இன்று சமயதீட்சை

வட்டக்கச்சி,ஓக.2

இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ அ.சிவலோகநாதக் குருக்கள் அவர்களால் சமயதீட்சை வழங்கப்படவுள்ளது.

சமயதீட்சை பெறவிரும்புவோர் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடந்த 22ஆம் திகதியும் மேற்படி குருக்களினால் 40 பேருக்கு இந்த ஆலயத்தில் சமய தீட்சை வங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-405)

## கணித விஞ்ஞானப் போட்டி

வட்டக்கச்சி,ஓக.2

கிளிநொச்சி வலயப் பாடசாலைககளுக்கிடையிலான கணித விஞ்ஞான அறிவுப் போட்டி நாளை மறுதினம் காலை 9 மணிக்கு வலயக் கல்விப் பணிமனையின் கல்வி வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் ஏற்கனவே கோட்டமட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பங்குகொள்வர். (4-405)

## ஊனமுற்றோருக்கு மூன்று சில்லுச் சைக்கிள்கள்

பரந்தன்,ஓக.2

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊனமுற்ற ஐந்து பேருக்கு மூன்று சில்லுச் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் சைக்கிள்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சிவசொருபநாதபிள்ளை தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மேலும் ஐந்து பேருக்குச் சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதன் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் த.தசரதராசகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (4-7-352)

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்துக்குக் காணி, கட்டடம் இல்லை

கிளிநொச்சி,ஓக.2

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்பட்டுவரும் கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்திற்குச் சொந்தக் காணி, கட்டடம் இல்லை எனச் சங்கத் தலைவர் பரமநாதபிள்ளை கவலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறும்போது, கிளிநொச்சி நகரில் நீண்டகாலமாகச் சங்கம் தமிழ்ப் பணியாற்றி வருகிறது. ஆனால் இதுவரை எமது சங்கத்துக்குச் சொந்தமாகக் காணியோ, கட்டடமோ கிடையாது. திட்டமிடல் குழுவினரால் எமக்குக் காணி ஒன்று வழங்கப்பட்டது.

எனினும், அதனைப் பயன்படுத்துவதற்கு உள்ளூர் நிர்வாகிகளுக்கிடையேயான முரண்பாடு காரணமாக இந்தக் காணியைப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார். (4-6-301)

## கிளிநொச்சி மாணவருக்கு நாட்டியக் கலைப் பயிற்சி

### இந்தியக் கலைஞர் வழங்கினார்

வட்டக்கச்சி,ஓக.2

இந்தியாவின் பிரபல நாட்டியக் கலைஞர் அப்துல்லா ஜாகிர் உசேன் கிளிநொச்சிப் பாடசாலை மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கினையும், செய்முறைப் பயிற்சியினையும் கடந்த 24ஆம் திகதி கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் நடத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்றத்தினரால் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு காலை 9மணியளவில் அழகியல் கலாமன்ற முதல்வர் க.விஜயசேகரன் தலைமையில் ஆரம்பமாகியது.

தமிழீழத் தேசியக் கொடியினைக் கிளிநொச்சி மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்

மங்கள விளக்கினை கலைஞர் ஜாகிர் உசேன், கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலய பிரதி அதிபரும் சங்கீத வித்துவானுமாகிய திருமதி பூலட்சுமி பொன்னுத்துரை ஆகியோர் ஏற்றிவைத்தனர். இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை இசைத்துறை உதவி விரிவுரையாளர் த.பிரதீபன், மாணவன் எஸ்.ரமணன் ஆகியோர் பங்குகொண்டனர்.

இக்கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட க.பொ.த(உ/த) மாணவர்களும் சாதாரணதர மாணவர்களும், துறைசார்ந்த ஆசிரியர்களும் பங்குகொண்டு பயன்பெற்றனர்.(4-405)

## கால்நடை அபிவிருத்திச் சங்கம் ஒட்டுசுட்டானில் இயங்கவில்லை

### பால் விற்பனையாளர் நட்டம்

ஒட்டுசுட்டான்,ஓக.2

ஒட்டுசுட்டானில் கால்நடை அபிவிருத்திச் சங்கம் இயங்காததால் பால் உற்பத்தியாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

தனியார் பால் வியாபாரிகள் ஒரு லீற்றர் பாலினை 11 ரூபாவாகக் கொள்வனவு செய்கின்றனர். இதனால், பால் விற்பனையில் குறைந்தளவு வருமானத்தையே பெற்றுக்கொள்ள முடிகின்றது.

மேற்படி சங்கத்தை உடனடியாகச் செயற்படுத்துவதன் மூலம் பாலுக்கான நிரந்தர விலையை நிர்மாணித்து கால்நடைப் பண்ணையாளர் பயன்பெற உதவவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.(4-341-204)

# ஓராண்டும் ஆயிற்றோ...

# ஒளி முகம் மறைந்து...?



# திருமதி ஜெயமாலா மகாதேவன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03-09-1962 | 02-08-2003 |

மாலா என்ற மலர்வாடி
மாதங்கள் பன்னிரண்டு ஆனதோ!
மனதை விட்டகலா நினைவுகளோ
மலைபோல் இன்றும் கனக்கிறதே!
மகாதேவனின் மனங்கவர்ந்த மனையாளே!
மகேசன்பாதம் சென்றது ஏனோ?
மக்கள் மனதில் மனம் பதித்து
மண்ணுலகைவிட்டு மறைந்தாயோ?
மாதம் எத்தனையானாலும்
மாலா நீ மறையமாட்டாய் எம்மைவிட்டு!
மனமுருகி வேண்டுகின்றோம்
உன் ஆத்மா சாந்தி அடைய!

அக்கா நீ மறைந்து
ஆண்டொன்று ஆனதோ?
அவனியிலே யார்துணை
அரவணைக்க எமக்கு
ஆசைக்கு ஓர் அக்கா நீ!
அதை மறந்து ஏன் போனாய்?
ஆரெமக்கு இவ்வுலகில்
அக்கா என்றழைக்க!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பங்களா லேன், மல்லாகம்.
T.P.:0712507828

அன்புக் கணவர், பிள்ளைகள், தாய், மாமா, மாமி
சகோதரர்கள், மச்சான்மார்.

# உயர் இரத்த அழுத்தத்தை தடுக்க முடியுமா?

*சென்ற வாரம் 'இந்த நூற்றாண்டில் சவாலாக விளங்கும் உயர் இரத்த அழுத்தம்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.*

நொறுக்குத் தீனிகள் போதைப் பொருள்களைப்போல அதை உபயோகிப்பவரை மேலும் மேலும் உபயோகிக்கத் தூண்டுவனவும் அடிமைப்படுத்தும் இயல்புடையனவுமாகும். இவை சிறிதுசிறிதாக, ஆனால், அதிகளவில் உண்ணப படுவதும் நோயாளரின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைகின்றது. பெண்கள், வைத்திய ஆலோசனையின்றி உடலெடை குறைக்கும் மாத்திரைகள் என விற்கப்படும் கருத்தடை மாத்திரைகளையும் பல்வேறு போலி மருந்துகளையும் பார்மஸிகளில் வாங்கிப் பயன்படுத்தும்போதும் மனக்கட்டுப்பாட்டினால் ஆண் உறுப்பை நீண்டநேரம் நிமிர்ந்தநிலையில் வைத்திருந்து திருப்திகரமான உடலுறவில் ஈடுபடமுடியாத ஆண்கள், இக்குறையை நிவர்த்திசெய்வதற்கான மருந்துகள், லேகியங்கள் எனக்கூறி விற்கப்படும் மருந்துகளை வாங்கிப் பயன்படுத்தும்போதும் அதிக இரத்த அழுத்தம் உட்படப் பல நோய்கள் ஏற்படுகின்றன.


துவிச்சக்கர வண்டியில் சென்று தமது அன்றாட அலுவல்களைக் கவனித்த பலரும் இப்பொழுது மோட்டார் சைக்கிளில் சென்றே தமது அலுவல்களைக் கவனிப்பதாலும் கதவு திறத்தல், கேற் திறத்தல், தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கல போன்ற பல்வேறு தேவைகளுக்கும் றிமோல்ட் கருவிகளைப் பயன்படுத்துவதாலும் உடல் உழைப்புப் போதாமையினால் கொழுப்புப் படிவு, ஊழைசசதை போன்றவற்றைப் பெறுவதும் அதிக குருதி அழுத்த நோய்களின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைகின்றன.

அதிக குருதி அழுத்தமும் நீரிழிவும் எவ்வித நோய் அறிகுறிகளையும் காட்டாமல் நோயுற்றவரை இரகசியமாகத் தாக்கிக்கொண்டே இருக்கும் (Silent killers). இந்த நோயாளிகளுள் அநேகர் வேறு நோய்களுக்குச் சிகிச்சைபெறச் செல்லும போதே அதிக குருதி அழுத்தம் இருப்பது வைத்தியரினால் கண்டுபிடிக்கப்படுகின்றது. இவ்வாறு கண்டுபிடிக்கப்படும்போது நோயாளி பல்வேறு பாதிப்புக்களுக்கும் ஆளாகியிருக்கலாம்.

வீட்டு உரிமையாளர்கள் தமது வீட்டைக் கறையான் தாக்குகின்றதா? சுவருக்குப் பூசிய வர்ணங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா? கதவுகளின் பூட்டுக்கள், பிணைச்சல்கள் சரியாக இருக்கின்றனவா? கூரையில் சேதம் ஏதும் ஏற்பட்டு உள்ளதா? தங்களுடைய வாகனத்தின் பிறேக் சரியாக இயங்குகிறதா? ரயர் தேய்ந்திருக்கிறதா? என்ஜின் சரியாக இயங்குகிறதா? என எல்லோரும் காலதத்துக்கு காலம் கண்காணிப்பார்கள் அவசிய திருத்த வேலைகளைச் செய்வார்கள், இந்த உடைமைகளின் பெறுமதி சில லட்சங்களாகவே இருக்கும். ஆனால், பெறுமதியை மதிப்பிடமுடியாத தமது உடலை நோய் ஏதும் பாதிக்கிறதா? என இவர்கள் ஆராய்வதில்லை. இதனாலேயே பலரும் நோய் முற்றியபின்னரே அதனைப் பற்றி அறிந்து அவதிப்படுகிறார்கள். ஒவ்வொருவரும் நம்பகத்தன்மையான மருத்துவ ஆய்வுகூடங்களில் அவசியமான மருத்துவ சோதனைகளைச் செய்தும், முறையான பயிற்சிபெற்ற வைத்தியரிடம் வைத்திய ஆலோசனை பெற்றும் தமது பெறுமதிமிக்க உடலைப் பேண வேண்டும். யாழ்ப்பாணத்தில் உரிய பயிற்சி பெறாதவர்களால் நடத்தப்படும் போலி ஆய்வுகூடங்களில் மருத்துவப் பரிசோதனை செய்வித்தல் ஆகாது. போலி மருத்துவ ஆய்வுகூடங்களைப் பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தலையிடி, தலைச்சுற்று, காதில் இரைச்சல், நெஞ்சுபடபடப்பு, நித்திரைக் குழப்பம், ஞாபகமறதி, மூக்கிலிருந்து இரத்தம் வடிதல், மூச்சுத் திணறல், அதிக சிறுநீர் கழித்தல் போன்றவை இந்த நோயின் குணங்குறிகளாக அமையலாம். உயர் குருதி அழுத்தத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. அடிப்படைக் காரணம் எதையும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஏற்படும் உயர்குருதி அழுத்தம் 70% - 80% நோயாளிகள் இந்த வகையினராகவே இருக்கிறார்கள்.

2. காரணிகளைக் கொண்ட உயர்குருதி அழுத்தம் 20% - 30% இந்த வகையினராக இருக்கிறார்கள். அகஞ்சுரக்கும் சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகள், சிறுநீரக நோய்கள், கர்ப்பம், பெண்கள் பயன்படுத்தும் கருத்தடை மருந்துகள், ஆண்கள் விந்து வெளியேற்றத்தைத் தாமதப்படுத்தவெனப் பயன்படுத்தும் ஏமாற்று மருந்துகள் போன்றவை இந்தவகை உயர்குருதி அழுத்தத்தை ஏற்படுத்தலாம். இவற்றிற்குக் காரணமாக இருந்த நோய்கள் குணப்பட்டதும் இந்த நோயும் நீங்கிவிடும். அதிக இரத்த அழுத்தத்திற்கான காரணிகளுள் சில தவிர்க்கமுடியாதவை. அவையாவன:-




1) வயது அதிகரித்தல்,

2) உயர்இரத்த அழுத்தமுள்ள பரம்பரையில் பிறந்திருத்தல்.

**தவிர்க்கக்கூடிய நடவடிக்கைகள்:**

1. உணவில் உப்பைக் குறைக்கவேண்டும்.
2. புகைத்தல், மதுவருந்துதல் போன்றவற்றை நிறுத்தவேண்டும்.
3. காப்பி குடிப்பதைக் குறைக்கவேண்டும்.
4. கொழுப்பு மிகுந்த தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் சேர்ந்த உணவுப்பொருள்களை உண்ணாது தவிர்த்தல், சோளம் எண்ணெய, சோயா எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றை மாத்திரம் மிகக்குறைந்த அளவில் பயன்படுத்தலாம்.
5. ஏறக்குறைய 300 கலோரியானது செலவிட வேண்டிய உடற்பயிற்சிகளை அல்லது துள்ளல்களை வைத்திய ஆலோசனையுடன் செய்யவேண்டும். இதுபின்வரும் சந்தர்ப்பங்களில் சாத்தியமாகலாம்:

(அ) 15 நிமிட ஓட்டம்.


(ஆ) ஒரு மணித்தியாலத்தில் 4 மைல் நடப்பது

(இ) 15 நிமிடநீச்சல்

(ஈ) 1 மணித்தியாலம் தோட்டவேலை

(உ) 1 மணித்தியால சயிக்கிள் சவாரி.

6. உயரத்துக்கேற்ற உடல் எடையைக் கட்டுப்பாட்டினுள் பேணவேண்டும். 3 Kg நிறை குறையும் போது - இதயம் சுருங்கும்போது ஏற்படும் அமுக்கத்தில் 7 mm உம் இதயம் விரியும்போது ஏற படும் அமுக்கத்தில் 4 mm உம் குறையும் எனக் கூறப்படுகின்றது.
7. கவலையை ஏற்படுத்தத்தக்க நடவடிக்கைகள் அனைத்தையும் தவிர்க்க வேண்டும். சிலர் அநாவசியமாகப் பிறரை உறுத்தக்கூடிய பகிடிகள், வார்த்தைப் பிரயோகங்கள், ஏழனச்சிரிப்புப் போன்றவற்றால் பகையை வளர்த்துக்கொள்கினறனர். இது துரதிர்ஷ்ட வசமானது. கவலைகள் தோன்றாது தவிர்ப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
8. நம்பகரமான நல்ல நண்பர்களை இனங்கண்டு அவர்களுடன் அளவுடன் உரையாட வேண்டும.
9. சூழ்நிலை அமைதியானதாக இருக்க ஆவன செய்யவேண்டும்.
10. தேவை ஏற்படின் உளநல ஆலோசனை



(Psycho therapy) பெறுதல் நன்று. சாந்திகம் அகல்வாய் நிறுவனங்களிலும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் இதற்கான வசதிகள் உண்டு.

**அதிக குருதி அழுத்த நோயாளிகள் கடைப்பிடிக்கவேண்டியவை**

1. ஒழுங்காக மருத்துவச் சிகிச்சை பெறவேணடும். மருந்துகளைக் காலந்தவறாது பயன்படுத்த வேண்டும்.
2. நோயாளர் அடையாள அட்டையை எப்பொழுதும் தம்முடன் வைத்திருக்கவேண்டும்.

**நுரையீரல் குருதிச் சுற்றோட்ட உயர் இரத்த அழுத்தம்**

நுரையீரல் குருதிச் சுற்றோட்ட உயர் இரத்த அழுத்தம் இருவகைப்படும்.

அவையாவன:-

1. நோய்க்கான காரணியைக்கூற இயலாததான நுரையீரல் குருதிச் சுற்றோட்ட உயர் இரத்த அழுத்தம் (Primary Pulmonary Hypertension).
2. நோய்க்கான காரணியைக் கூறத்தக்க நுரையீரல் குருதிச் சுற்றோட்ட உயர் இரத்த அழுத்தம் (Secondary Pulmonary Hypertension) கடல் மட்டத்தில் வாழ்கின்ற ஒரு சுக தேகியின் நுரையீரல் குருதிச் சுற்றோட்டத்தின் சிஸ்ரோலிக் அழுத்தம் 18 - 25 மி.மி. பாதரச அளவுடையதாயிருக்கும். இந்த இரத்த அழுததம் 30 மி.மி. இற்கு மேல் அதிகரிக்கும்போது நுரையீரல் குருதிச் சுற்றோட்டத்தில் உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும. படம் (1) சுகதேகி ஒருவரின் சுவாசப்பையில் காணப்படும் இரத்தக்குழாய்களை காட்டுகின்றது. படம் (2) நோய்க்கான காரணியைக் கூற இயலாத நுரையீரல் குருதிச் சுற்றோட்ட உயர் இரதத அழுத்தத்தால் இறந்த ஒருவரது சுவாசப்பையில் காணப்பட்ட (அதிக இரத்த அழுத்தம் காரணமாக) விரிவடைந்துள்ள இரத்தக் குழாய்களை காட்டுகின்றது.

இவ்விரு வகை நோய்களையும் தொகுதிச் சுற்றோட்டத்தின் இரத்த அழுத்தத்தை அளவிடப்படும் 'ஸ்பிக்கோ மனோமிற்றர்' எனப்படும் எளிய கருவியின் மூலம் இலகுவாக அளவிடவும முடியாது. இந்தக் கருவியைப் பயன்படுத்தி நோயை இனங்காணவும் முடியாது. இதய அடிப்பு ஒலியில் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்படின் X கதிர், ஈ.சீ.ஜீ., எக்கோ காடியோகிராம் பரிசோதனைகள் செய்யப்பட்ட பின்னரே இந்த நோய இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. இந்த நோய் கண்டுபிடிக்கப்பட்டவருக்கு இறந்தவர்களது இருதயத்தையும் சுவாசப்பையையும் மாற்றீடு செயவதே இவர்களது ஆயுளை நீடிப்பதற்கான வழியாகும். இறந்தவர்களது உடலிலிருக்கும் நுரையீரலை மாத்திரம் எடுத்து, மாற்றீடு செய்தும் இவர்களது ஆயுளை நீடிக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்த (உறுப்புகள்) இளையங்கள் மாற்றீடு செய்யப்படாதவிடத்து மருந்துகளின் உதவியுடன் இந்த நோயாளிகள் மூன்று ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடும் எனக்கூறப்படுகிறது.

ச.ஆ.கோபாலமூர்த்தி

இந்த நோய்க்கான காரணிகள் எவையெனத் தெளிவாகத் தெரியாத போதிலும் ஈரல், இரத்தக்குழாய்கள் போன்வற்றில் ஏற்படும் பாதிப்புகளும் சில மருந்துகளும் இந்த நோயை ஏற்படுத்தக்கூடியவை எனக் கருதப்படுவதால் ஈரலை அழிவுக்கு உட்படுத்துவதும் மதுவருந்தும் பழக்கம், இரத்தக்குழாயில் கொலஸ்ட்ரோல் படிவை ஏற்படுத்தும் அதிக கொழுப்புணவு உண்ணும் பழக்கம், இரத்தக் குழாய்களைச் சுருங்கவைக்கும் புகைப்பிடித்தல் பழக்கம் போன்றவை, இந்நோயைத் தோற்றுவிக்கக்கூடும். சைக்கிள் ஓட்டம், நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளைக் கொண்ட அமைதியான வாழ்க்கை முறைகளையும், வாகனப் புகையற்ற வாழிடத்தில் வாழ்தலும் சாலச் சிறந்தன. கருவளமுள்ள பெண்களுக்கு இந்த நோய் ஏற்படின் அவர்கள் கருவுறுவதைத் தவிர்க்க வேண்டும். இந்த நோயாளிகள் கருவுறுவது உயிராபத்தை ஏற்படுத்தும். வைத்தியரின் சிபார்சின்றி பார்மஸிகளில் மருந்துகளை வாங்கிப் பயன்படுத்துபவர்களும் சில மருந்துகளின் பக்கவிளைவாக இந்த நோய்க்கு ஆளாகும் வாய்ப்பு உண்டு. நோய்க்கான காரணிகளைக் கூறக்கூடிய நுரையீரல் குருதிச்சுற்று உயர் இரத்த அழுத்தம் வேறு நோய்களினால் ஏற்படுத்தப்படும்.

அதிக கொழுப்பற்ற உணவுகளை உண்டும், அநாவசிய ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு மனச் சஞ்சலங்களை வரவளைப்பதைத் தவிர்ததும், தியானப் பயிற்சியில் ஈடுபட்டும் மனச்சாந்தியுடன் வாழ்வது நோய்கள் அணுகாது தடுக்கும வாழ்க்கை முறை என்பதை உணர்வோம். நோய்கள் வரமுன் காப்போம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

*(முற்றும்)*

# மனிதனை உளரீதியாக தாக்கும் மனநோய்...

உடல் ரீதியாகவே ஏற்படும் நோய்களைப் போலவே உள ரீதியாகவும் நோய்கள் ஏற்பட இடமுண்டு. மனநோய் உளத்தைப் பாதிப்பதனால் ஏற்படும் ஒன்றாகும். மன நோயினால் பாதிக்கப்படும் ஒருவர் தனது சிந்தனை சக்தியில் பாதிககப்படுவதுடன், கிரகித்தலிலும் பாதிப்படைகிறார். இது அவரது வாழ்க்கையைப் பாதிக்க முற்படுகிறது.

மனநோய் பலவகைப்படும். கவலையினால் ஏற்படும் மனநோய், அதீத பயம் காரணமாக ஏற்படும் மனநோய், பரம்பரையான மனநோய், சிர்சாபேர்னியா, மேனியா போன்ற உக்கிரமான மனநோய் என்பன மனநோயில் காணப்படுகின்றன.

மனநோய் யாருக்கும் எப்போது ஏற்பட இடமுண்டு. எனினும், அதை நிர்ணயிக்க சில காரணிகள் ஏதுவாக அமைகின்றன. உயிர் இரசாயனக் காரணிகள், மூளையில் தோன்றும் பௌதிக, இரசாயனக் காரணிகள், உளவியல்க் காரணங்கள, தொடர்ச்சியான மனஅழுத்தம், தன்னம்பிக்கை இழத்தல், பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாது திணறுதல், சுய கட்டுப்பாட்டை இழத்தல், சமூக காரணிகள், இணைபிரியாதோரின் தாக்கம், குடும்பப் பிரச்சினைகள், வறுமை, தொழிலின்மை, எதிர்பாராத சோக நிகழ்வுகள் என்ற பல காரணங்களுக்காக ஏற்பட இடமுண்டு.

எனவே, மனநோயாளரை அடையாளம் கண்டு ஏற்ற சிகிச்சையளிக்க முன்வரவேண்டும். மன நோயாளர் பெரும்பாலும் நடத்தையில் மாற்றமுடையவராக இருப்பார். நாளாந்த வேலைகளைச் செய்யமுடியாமை தென்படும். உணவு உட்கொள்ளவோ அல்லது நித்திரையிலோ அசாதாரணமாக இருப்பார். அக்கறையின்மை, விரக்தி மனப்பான்மை கொண்டிருப்பார். மனச்சோர்வடைந்து முகத்தில தென்பட இடமளிப்பார். அதிக பயம் கொண்டிருப்பார். எதிலும் சந்தேகப்படுதல் அவரது குணமாக மாறிவிடும். எது எப்படியாயினும் அவரது மாற்றங்கள் அவரது மனநோயை நிரூபிக்கக் கூடியனவாக இருக்கும். சிலர் கொலைப் பயமுடையவராக இருப்பர். சிலர் தற்கொலை எண்ணமுடையவராக மாறிவிடுவர். எமது மொத்த சனத்தொகையில் பத்து சதவீதமானவர்கள் மனநோயாளர்கள் எனக் குறிப்பிடுவர். இதற்குக் காரணம் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம், யுத்தம், வன்முறைகள், இடப்பெயர்வுகள், அநாதைகளாக்கப்பட்டமை, விதவைகளாக்கப்பட்டமை, பாலியல் துன்புறுததல்கள் என்பன சுகதேகிகளாக இருந்த மக்களை மனநோயாளர்களாக மாற்ற ஏதுவாகின. இலங்கையில் 1980இல் 36 ஆயிரத்து 250 ஆக இருநத மனநோயாளர் எண்ணிக்கை 1999ஆம் ஆண்டில்




50 ஆயிரமாக உயர்ந்தது. 2000 ஆம் ஆண்டில் 55 ஆயிரமாகக்கூடியது. மனநோயாளரில் பெருமபாலானோர் போதைப் பொருள் மற்றும் மதுபாவனைக்குட்பட்டவர்கள் என ஆய்விலிருந்து தெரிகின்றது. மனநோயாளரில் 25 வீதத்தினர் மது, போதை போன்றவற்றிற்கு அடிமையாகித் தமது மூளை செயலிழந்தவர்களாக, சாரணியம் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும் 25 வீதத்தினர் முழு மனநோயாளராகியுள்ளனர். இலங்கையில் ஆயிரம் பேருக்கு 2-5 பேர் மன நோய்கத்கு உட்பட்டுள்ளனர்.

அண்மைக் காலங்களில் இடப்பெயர்வு, தொழில் தேடி வெளிநாடு செல்லல், மதுபாவனை, போதைப் பொருள் பாவனை என்பன காரணங்களாக அமைகின்றன. இலங்கையில ஒவ்வொரு 100 பேரிலும் 8 பேர் சிறிய அளவு மனநோயாளர்களாகவும், ஒவ்வொரு 100 பேரிலும் இரண்டு அல்லது ஒருவர் மோசமான மன நோயாளர்களாகவும் இருப்பது ஆய்வுகள் மூலம தெரிய வருகின்றது. உலக சுகாதார நிறுவன 2001ஆம் ஆண்டு பிரகடனப்படி ஆயிரம் பேரில் 2-5 பேர் மனநோயினால் வருந்துகின்றனர் என்றும் பெரும்பாலும் 25 வீதத்தினர் மதுவுக்கு அடிமையானவர்கள் என்றும் கூறுகின்றது. மேலும் சில ஆய்வுகள் இலங்கையில் ஒவ்வொரு 100 பேரிலும 8 பேர் சிய அளவு மன நோயிலும், 100 பேரில் இருவர் அல்லது ஒருவர் பெரிய மனநிலை பாதிப்பிலும் உள்ளனர் எனக் கூறுகின்றது. இந்த மனநோய், மரணத்தை விடக் கொடியதாகும். வாழ்வில் அவதியுறும் நோயாகும். நேரகாலத்துடன் இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்காவிடின் விபரீதத்தை ஏற்படுததும். வாழ்வில் பாதிப்புக்குள்ளானவர் பலவீனமுடையவராக இருப்பின் இது அவரைப் பிடித்துக் கொள்ளும். பிள்ளைப் பேற்றின்பின்கூட சில தாயமார்கள் மன நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மனநோயில் "நியுரோசிஸ்" என்னும் மனநோய 10 இல் ஒருவருக்கு ஏற்பட வாய்ப்புண்டு. இது சிறு மனநோயாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தாம் பாதிக்கப்பட்டது தெரிய வரும். மேலும் 'ஹிஸ்ரீரியா' என்ற மனநோய் இளம் பெண்களைப் பெரிதும் பாதிக்கும் நோயாகும் இதனால், சிலர் தம் போக்கில் திரிய முற்படுவர் அடுத்தவகை 'ஒப்சிசிசன்ஸ்' என்னும் நிலையாகும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி குளிப்பர், மூடிய கதவுகளைச் சந்தேகத்துடன் திறந்து திறந்து பார்ப்பர். வைத்த பணத்தைத் திருப்பித் திருப்பி எண்ணுவர், மறைப்பர். எல்லா வேலைகளையும் சரிவரச் செய்யவேணடும் என்ற அவாவில் இயற்கைக்கு மாறாகச் செய்ய முற்படுவர். இன்னொரு நிலை 'போபியா' எனப்படும பயததின் நிலையாகும். இவர்கள் அசாதாரணமானவராக இருப்பர், அதிகம் பயப்படுவர், இவர்களது நடத்தையில் மாற்றங்கள் ஏற்படும். மரண பீதியுடையவர்களாகவும், தற்கொலைக்கு முயல்பவர்களாகவும் இவர்கள் இருப்பர். சிறு சிறு பூசசிகள் போன்றவற்றிற்குக்கூட இவாகள் பயப்படுவர். பெரும்பாலும் தொழில் பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சினை இதற்கு வழிகோல இடமுண்டு. இவர்கள் நித்திரையின்மை, வேலையில் வெறுப்பு, உணவில் விருப்பமின்மை, சகலவற்றையும் இழந்து விட்டோம் என்ற பிரமைபிடித்தவர்களாகக் காணப்படுவர். சிலர் அங்கலாய்ப்பு அல்லது பதற்ற நிலையில் இருப்பர். எதுவும் நடக்கும் என எதிர் பார்த்துத் துன்பப்படுவர். இப்படியான மனநோயகள் சிறு மனநோய்களாகக் கருதப்படும். இப்படி

சொ.அமிர்தலிங்கம்
(ஆளுநரின் செயலாளர், ஆளுநர் அலுவலகம், வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலை)

மனநோய் ஏற்பட்டோர் தம்மில் உளரீதியான தைரியத்தை வரவழைக்கவேண்டும்; பயத்தைப் போக்கவேண்டும்; கலகலப்பாக இருந்து பழக வேண்டும்; தேவையேற்படின் வைத்தியரை நாட வேண்டும்.

மேலும் பாரிய மனநோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பும் உண்டு. இவற்றில் "சைக்கோஸிஸ்" என்பது பாரிய மனநோயாகும். 100 இல் ஒருவர் இதனால் பாதிப்பிற்குள்ளாகின்றார். இவர்கள் மனநோயாளர்கள் தாம் என்பதை ஏற்க மறுப்பார்கள். இவர்களுக்கு மருந்து கொடுக்க வேண்டும. இதில் இரண்டு வகையுண்டு (1) இஸ்கிச்சோபிரினியா/உளப்பிளவு நோய். (2) மெனிக்டிப்றசிவ் சைகோஸிஸ்.

(வளரும்)

# கைதடியில் பன்றிகளால் மக்களுக்குச் சிரமம்

கைதடி,ஓக.2

கைதடிப் பகுதியில் பன்றிகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக அப பகுதி மக்கள் புகார் தெரிவித்துள் ளனர்.

கைதடி குமரநகர், கைதடி மேற்கு ஆகிய பகுதிகளிலேயே இவற்றின் தொல்லை அதிகாித்திருப்பதாகவும் - விவசாய நிலங்களுள் நுழையும் பன்றிகள் பயிர்களை நாசம் செய்வதுடன் பொது இடங்களில் பயணிகளுக்கு சிரமம் கொடுத்து வருவதாகவும் கூறப்பட்டது.

கடந்த வாரமும் கைதடி குமர நகர் பகுதியில் இரண்டு பெண் கள் பன்றியினால் மூர்க்கத்தன மாகத் தாக்கப்பட்டு காயமடைந் தமை குறிப்பிடத்தக்கது. (எ-75)


## பெற்றுக்கொள்ளவும்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த குணசேகர லிங்கம் சங்கீதா என்பவருடைய அடை யாள அட்டையும் ஒரு தொகைப் பணமும் அடங்கிய கைப்பை 29.07.2004 வியாழக் கிழமை அளவெட்டி - யாழ்.சேவை மினி பஸ்ஸில் தவறவிட்டுக் கண்டெடுக்கப்பட் டுள்ளது. தயவுசெய்து தவறவிட்டவர் உடன் வந்து ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:

வை.மகேந்திரம்,
சிற்றூர்திச் சேவைச் சங்கம்
768 இலக்கப் பாதை, அளவெட்டி.

(347784)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 - 04 - 1978 | 05 - 08 - 2001 |

அமரர் கனகரத்தினம் ஜீவகாந்தன் (ஜீவா)

திதி: துதியை

ஆண்டுகள் மூன்று சென்றதையா
துயரங்கள் தீரவில்லை!
ஆற நினைக்கிறோம்
எம்மால் முடியவில்லை!
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (34726) (26-13) - குடும்பத்தினர்.

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

### தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**ஆரம்பம்: 09-08-2004**

I.

| Course | Duration |
|---|---|
| A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 6MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3MONTHS |
| G. INTERNET & E - MAIL | DURATION 1MONTH |
| I. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5MONTHS |

II. CERTIFICATE COURSES:-

i) M.S. WORD - 2000
ii) M.S. EXCEL - 2000
iii) M.S.ACCESS - 2000
iv) M.S. POWER POINT
v) VISUAL BASIC VER 6.5
vi) PASCAL
vii) d BASE III+
viii) PAGE MAKER
ix) WINDOWS 95
x) COREL DRAW
xi) d BASE FOR WINDOWS
xii) PRINT SHOP DELUXE
xiii) ADOBE PHOTO SHOP
xiv) QUICK BOOK

EACH 3 MONTHS

| | | |
|---|---|---|
| III. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| IV. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| V. | மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| VI. | ஜெனரல் எலக்ரீஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| VII. | வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| VIII. | கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| IX. | மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING) (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| X. | மரவேலை (with Use of Machinery) (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| XI. | குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

எமது நிறுவனத்தில் வானொலி, தொலைக்காட்சிப்பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் சகல விதமான இரும்பு சார் உற்பத்திப் பொருள்களும் ஒட்டுவேலைகளும் மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவுமூலமும் ஒடுக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்துகொடுக்கப்படும்.

NOTE:-

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரங்காட்டி பங்குக் குருவானவரன் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2004**

2004 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதனைச் சகல வாகன உரிமையாளருக்கும் அறியத் தருகின்றோம்.

(சனி, ஞாயிறு வகுப்புகளும் இடம்பெறும்)

மேலதிக விவரங்களுக்கு:
REGISTRAR,
**PATRICIAN INSTITUTES,**
59, ST. PATRICK'S ROAD,
JAFFNA.

(C/36671) (26-13)

## அணைந்தும் அணையாத ஆண்டுகள் 24 இல்



| வீட்டில் | வீதியில் |
|---|---|
| 14 - 11 - 1935 | 02 - 08 - 1980 |

பொலீஸ் சார்ஜன்

அமரர் சுவாம்பிள்ளை யோசவ் அன்ரன்


(கனால் வீதி, மாதகல்)

அப்பா!
நீண்டதொரு நாள்கள்
நெருங்கிக் கடந்தாலும் - உங்கள்
நினைப்பொழியவில்லை நமக்கு
உங்கள் அன்பு முகமும், அரவணைப்பும்
கொஞ்சும் கதைகளும், குதூகலிப்பும் - என்றும்
எங்கள் நினைவில் சிறகடிக்கிறது
பாரதி மீசையுடன் கம்பீர உருவமும்
புன்முறுவல் எல்லாம் - நித்தமும்
எம் நினைவில் மலர்கிறது.

தற்போதைய முகவரி:
றக்கா லேன்,
யாழ்ப்பாணம். (34779) (26-13)

என்றும் உம் நினைவுகளுடன்:
அன்புக் குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

சி.வைரவிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: ஆடி அபரபக்க துதியை (02-08-2004)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27-03-1925 | 06-08-2001 |

பாசத்துடன் பழகி நேசத்துடன் உலவி
பண்போடு வாழ்ந்த அன்புத் தெய்வமே!
இன்றோடு மூன்றாண்டுகள் மறைந்து
போய்விடினும்
என்றும் அகலாது உங்கள் நினைவு!

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (34770) (26-13) - குடும்பத்தினர்.

# எந்தவிதப் பேரினவாதச் சவாலையும் அதேவிதத்தில் சந்திக்க நாம் தயார்

## அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

வலி. வடக்கு.ஓக.2

பேரினவாத சக்திகள் மீண்டும் ஒரு தடவை எம்மீது போரைத் தொடுக்குமாக இருந்தால் அந்தப் போரைச் சந்திப்பதற்கு தலைவர் என்றும் தயாராகவே இருக்கின்றார். எதிர்காலத்தில் சிங்களப் பேரினவாதத்தினால் விடப்படக்கூடிய எந்தச் சவாலையும் அச்சுறுத்தலையும் அதே வடிவத்தில் சந்திப்பதற்குப் பெரும் பலத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் இருக்கின்றது.



மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது பேராளர் சங்கம மகாநாடு மானிப்பாய் பட்டினசபை ரவீந்திரன் கலைவிழா மண்டபத்தில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய தங்கன்,

இந்தத் தேசத்தின் உரிமையாளர்களும் உடைமையாளர்களும் நாங்களே. எம்மால்தான் இந்த எமது தேசத்தை ஆளமுடியும். பலம் மிக்கவர்களாக இருப்பதற்கு எம்மிடையே ஒற்றுமை இருக்கவேண்டியது அத்தியாவசியம் ஆகும்.

ஒரு தேசியக் கொள்கைக்காக தேசியத் தலைவரின் வழிகாட்டலின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள இத்தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்களாகிய நீங்கள் இந்தப் போராட்டத்திற்குப் பலம்மிக்க சக்தியாகவும் உரமாகவும் திகழ்வீர்கள் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை.

எமது கொள்கைகளை எமது இலட்சியங்களைச் சுமந்து சென்று மக்களிடையே எடுத்துரைத்தும் செயல்பட்டுவருவதையிட்டும் நாம் பெருமைப்படுகின்றோம்; பாராட்டுகின்றோம். யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் மீண்டும் மீண்டும் அழிவுப் பாதையிலேயே அது சென்று கொண்டு இருக்கின்றது. இச்செயலானது ஒரு திட்டச் செயலாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்தகைய செயற்பாட்டை நாம் அனைவரும் ஒன்றுபட்டு நன்கு திட்டமிட்ட முறையில் செயல்படுவதன் மூலம் தடுத்து நிறுத்தவும், இல்லாது ஒழிக்கவும் முடியும்.

நாளாந்தம் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வேறுபாடு இன்றிக் கலாசார பண்பாட்டுச் சீரழிவுகளுக்குள் காணப்படுவதை வெளிப்படுத்தி வருகின்றன.

இச்செயல்களை அடக்குவதற்கும் இல்லாதொழிப்பதற்குமான நடவடிக்கைகளை எமது தலைமை மேற்கொண்ட வண்ணமே இருந்து வருகின்றது.

சமாதானச் சூழல் நிலவும் இன்றைய கால கட்டத்தில் குடாநாட்டைப் பாதுகாக்கும் பணியில் தேசிய எழுச்சிப் பேரவை மூலம் ஈடுபட்டுள்ள நீங்கள், இந்தத் தேசத்தைக் காக்கும் பெரும் பணியிலும் எம்முடன் இணைந்து செயல்படவேண்டுமென இந்த மாநாட்டின்மூலம் உங்களிடம் வேண்டிநிற்கின்றோம் - என்று கூறினார். (ப-86)

# கூட்டுறவுத்துறை எதிர்காலத்தில் பாதுகாத்துக் கட்டிவளர்க்கப்படும்

## மாவை சேனாதிராசா எம்.பி. உறுதி

வலிகாமம்தெற்கு,ஓக.2

"கூட்டுறவுத்துறை எமது மக்களோடு ஒன்றிப்போன ஒரு சொத்து. தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்கால வளர்ச்சித்திட்டங்களின் போதும், தமிழ்த் தேசியக் கட்டமைப்பினரான எமது பொருளாதார கொள்கைகள் உருவாக்கத்தின் போதும் கூட்டுறவுத்துறை மீண்டும் பலமாகக் கட்டியெழுப்பப்படும். தனியார்துறைப் போட்டிகளில் இருந்து கூட்டுறவுத்துறையைப் பாதுகாத்து வளர்ப்பதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்."



சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் உடுவிலில் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறினார்.

சுமார் 55லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்நிலையம் ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரம், தனியார் மயப்படுத்தல் என இன்று தோன்றியுள்ள புதிய பொருளாதாரக் கட்டமைப்பு வறிய நாடுகளுக்கு மிகப்பெரிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. புதிய பொருளாதார முறைக்கெதிராகத் தரம்மிக்க வல்லரசு நாடுகளுடன் ஏழை நாடுகள் போட்டியிட வேண்டிய நிலை தோன்றியுள்ளது. ஏழை மக்களின் பிரச்சினைகளின் மறுவடிவமாகக் கூட்டுறவுத்துறைக்கு ஏற்பட்டுள்ள சவால் விளங்குகின்றது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக யாழ். மாவட்டத்தில் ஏனைய துறைகளைவிடக் கூட்டுறவுத்துறையே சிறந்து விளங்கிவந்துள்ளது.

போர் காரணமாகத் தனியார் துறையுடன் கூட்டுறவுத்துறையும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இருப்பினும், போர்க்காலங்களில் கூட யாழ். கூட்டுறவுத்துறை ஊழியர்கள், நிர்வாகிகள் மிகத் துணிச்சலாக அர்ப்பணிப்புடன் கூடியசேவையை மக்களுக்கு ஆற்றியுள்ளனர். குறைந்த வேதனம் பெற்றாலும் அவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்புச் சேவை மகத்தானது என்று அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

பெரும்பான்மைப் பலம் அற்ற அரசு, போரினால் ஏற்பட்ட விளைவுகளை மாற்றியமைதத்துச் சமாதான வழியில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வரும்போதுதான் உலகநாடுகள் நிதிஉதவி வழங்கும். அரசும் அதனுடன் இணைந்த இனவாதிகளும் இனப்பிரச்சினையைத் தீர்க்க இணைந்துள்ளன. அவற்றின் செயற்பாடுகளும் பொருளாதார நிலையும் எந்தளவு முன்னேற்றம் காணும் என்பது கேள்விக்குறி.

50 ஆண்டுகளுக்கு முன் தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட தாயகக் கோட்பாடு பேரினவாத அரசின் சூழ்ச்சியால் உடைந்துவிடும் நிலையில் உள்ளது. இராணுவப் புலனாய்வுத் துறையூடாகக் கிழக்கைப் பிரித்துவிடும் சூழ்ச்சிகளும், தொடரான வன்முறைகளும் இடம்பெறுகின்றன. யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் வாய்ப்புக் குறைந்து செல்லும் நிலையில், அது எவ்வளவு காலம் நிலைக்கும் என சர்வதேசம் கேள்விக்குறியோடு பார்த்து நிற்கிறது.

போர் அச்சுறுத்தல்கள் மூலம் எமது கோட்பாடுகளை அழித்து மீண்டும் எம்மை அடிமைகளாக்க பேரினவாதசக்திகள் ஒன்றுதிரண்டு யுத்த முனையில் பிரச்சினைகளைத் தீர்க்கக் கங்கணம் கட்டிநிற்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் எமது இனம் அனைத்துத் துறைகளிலும் எவ்வித பிளவுகளுக்கும் இடமின்றி ஒன்றுபட்டுப் பலமாக இச்சவால்களை எதிர்நோக்கவேண்டும் எனக் கூறினார்.

யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்தவருமான சொலமன் சிறில் உரையாற்றுகையில்-

எமது தேவைகளுக்காகத் தென் இலங்கையை நம்பிக்கொண்டு தமிழீழப் போராட்டங்களை நடத்துவதில் அர்த்தம் இல்லை. தமிழீழத்தில் பொருளாதாரத்தைக் கட்டிவளர்ப்பதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும். அதற்கு முன்னோடியாகச் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம் பழத்தொழிற்சாலை, எரிபொருள் நிரப்பு நிலையம் போன்ற தொழில் நிறுவனங்களை ஆரம்பித்துள்ளது என்றார். (ப-152)

# சமய ஒற்றுமைக்கும் பரதக்கலை கருவியாக விளங்குகின்றது

## அரங்கேற்ற நிகழ்வில் கருத்து

குருநகர்,ஓக.2



இந்துமதத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட பரதக் கலை இன்று யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவர்களாலும் ஆடப்படுகின்றது இதன் மூலம் எமது இரு சமயத்தவர்களுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் சக்தியாகவும் இக்கலை விளங்குவது பெருமைப்படவேண்டிய தொன்றாகும்.

யாழ்.திருமறைக்கலாமன்ற மாணவியும் குருநகரைச் சேர்ந்தவருமான செல்வி சுதர்சினி லூர்த்துநாதனின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவு நடனத்துறைத் தலைவர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நடன நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரைநிகழ்த்திய முதன்மை விருந்தினர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரா மேலும் தெரிவித்ததாவது:-

முற்காலத்தில் சின்னமேளம் என்று கூறப்பட்ட ஆடற்கலை பரதமாக இன்று ஆடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களிடம் இக்கலை இன்று மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளது. வெளிநாடுகளில் உள்ள தமிழர்களும் இப்பரதத்தைக் கற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து அரங்கேற்றம் செய்யும் நிகழ்வுகளும் இன்றைய நாள்களில் நடைபெறுவதை நாம் காண்கின்றோம். இந்துக்களின் பண்பாட்டிலே சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஒவ்வொரு கலையும் ஏதோ ஓர் அடிப்படைத் தத்துவத்தை எமக்கு வெளிக்கொணர்வதாக உள்ளபோதிலும் பரதக்கலை எல்லாவற்றுக்கும் மேலாக இறை சக்தியுடன் ஆன்மா இரண்டற ஒன்றிணையும் தத்துவத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பரதத்தை கற்பிக்கும் போதும், அது ஆடப்படும் போதும் மனம், உடல் இரண்டுமே இறைவன்பால் கலந்துவிடும் தன்மையைப் பெறுகின்றது. தமிழ்நாட்டில் பிறந்து வளர்ச்சி பெற்ற இப்பரதக்கலை எமது ஈழநாட்டிலும் பெரிதும் விரும்பிப் பயிலப்பட்டு வளர்ச்சி கண்டுள்ளது என்றார்.

இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கிய யாழ். திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் தமதுரையில்:-

நடனம் தெய்வீகமானது, ஆடல் மூலமாக இறைவனிடம் ஒன்றிப்பது. உலகத்தில் அச்சாணிவேர் சிற்றம்பலத்தில் உள்ளது. பரதம் எமது பாரம்பரியக் கலையாகும். இக்கலையில் கலநது கொள்ளும் ஒவ்வொருவரும் தெய்வீகத்தை உள்வாங்கி மற்றவர்களுக்கு வழங்குகின்றார்கள். ஒவ்வொரு உடல் அசைவும் தெய்வீகத்தை வெளிப்படுத்துகிறது. நடனம் மூலம் தெய்வீகத்தை உள்வாங்குகின்றோம். பூகோளமயமாக்கல் இன்று எம்மைத் தொட்டு நிற்கின்றது. பரதம் வெறும் ஆடற்கலை மட்டுமல்ல. இறைவனது தெய்வீகத்தை உள்வாங்கி வெளிப்படுத்துகின்றது. இதுவே பரதநாட்டியத்தின் சிறப்பாகும் என்றார்.


இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸும் ஆசியுரை வழங்கினார்.

தனது இளம்வயதிலேயே நடனக்கலையில் ஆர்வம் உள்ளவராகக் காணப்பட்டார். பாடசாலையில் நடைபெறும் விழாக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் விருப்புடன் கலந்து கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தியதுடன் பார்க்கும் அனைவரையும் தனது நடனத்தில் விருப்பம் கொள்ளச் செய்பவராகவும் உள்ளார். வட இலங்கைச் சங்கீத சபையால் நடத்தப்பட்ட நடனப்பரீட்சையில் நான்காம் தரத்தில் திறமைச சித்தி பெற்றமை அவரது அயராத உழைப்பின் திறனை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் யாழ். திருமறைக்கலாமன்றத்தில் சேர்ந்து தமது திறமையை வளர்த்ததுடன் அம்மன்றம் ஐரோப்பிய நாடுகளில் நடத்திய பல நடன நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்துள்ளார். இவரை இந்நிலைக்கு உயர்வித்த இவரது பெற்றோர்களும், நடனக் கலையைப் பயிற்றுவித்த நாட்டிய கலாவித்தகர் திருமதி ஆனந்தஜோதி தர்ஷனனும் போற்றப்படவேண்டியவர்கள்- என்றார்.

இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடாதிபதி ஆ.இராசதுரை, யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் சொ.சிறில், குருநகர் புனித யாகப்பர் ஆலயப பங்குத்தந்தை வணபிதா.ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் ஆகியோரும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்கள்.

யாழ்.திருமறைக் கலாமன்ற கவின்கலைகள் பயிலக அதிபர் கலாபூசணம் ஜி.பி.பேர்மினஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். (ப-51)




# தலைக்கவசம் அணிவதால் ஆபத்துக்களைத் தவிர்க்கலாம்

## பொலீஸ் தரப்பில் அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு,ஓக.2

"தேவையற்ற விதத்தில் ஏற்படும் உயிராபத்தில் இருந்து காப்பாற்றிக் கொள்ள மோட்டார் சைக்கிளில் பயணம் செய்பவர்கள் தலைக்கவசம் அணிந்துகொள்ள வேண்டும்"

சுன்னாகம் பொலீஸ் நிலைய உதவிப் பொலீஸ் பரிசோதகர் கே.கண்ணன் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பொதுமக்கள் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைகள் பற்றி இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனை வலியுறுத்திக் கூறினார்.

சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி காமினிஅல்பவவின் ஆலோசனைகளுக்கு அமையப் பொது மக்களுடனான இச்சந்திப்பை உதவிப் பொலீஸ் பரிசோதகர் கே.கண்ணன் நடத்தினார்.

ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கேகண்ணன் மேலும் கூறியதாவது:-

சுன்னாகம் பொலீஸ் நிலைத்திற்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக வீதிவிபத்துக்கள் அதிகரித்துள்ளன. பெரும்பாலான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள்களுடன் சம்பந்தப்பட்டவையாக உள்ளன.

கந்தரோடை, இணுவில் ஆகிய இடங்களில் நடைபெற்ற வீதிவிபத்துக்களில் இருநபர்கள் மரணமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்த போது தலைக்கவசம் அணிந்திராமையினாலேயே இவ்விபத்துக்களின் போது தேவையற்ற விதத்தில் இவர்கள் மரணத்தைத் தழுவிக் கொள்ள நேரிட்டுள்ளது.

பொலீஸ்காரர்களின் பரிசோதனைகளுக்காக அன்றி, உங்கள் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கட்டாயமாக தலைக்கவசம் அணிந்து செல்லுங்கள். மோட்டார் சைக்கிளைச் செலுத்துபவர்கள் மட்டுமல்ல அதன்பின்னால் இருந்து செல்பவர்களும் தலைக்கவசம் அணிவது அவசியம் என்றார்.

மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் இன்றி மோட்டார் சைக்கிள்களில் செல்ல வேண்டாம்.

சாரதிகள் வேகமாக வாகனங்களைச் செலுத்துவதாலும் விபத்துக்கள் நேரிடுகின்றன. போக்குவரத்து ஒழுங்கு முறைகளை உரிய முறையில் கடைப்பிடித்து நடந்தால் பெரும்பாலான விபத்துக்களைத் தடுத்துக்கொள்ளமுடியும். என்றும் அவர் சொன்னார்.

(ப-152)

## அறிவித்தல்
### NEW REST HOUSE
தொலைபேசி இலக்கம் மாற்றம்

எமது நிறுவனத்தில் தொடர்புகொள்ளும் எமது வாடிக்கையாளர்களுக்குத் தொலைபேசி இலக்கம் மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

☎ 021 222 7839

19,சோமசுந்தரம் அவென்யூ, சுண்டுக்குளி, யாழ். - நிர்வாகி. (34795) (43-11-15-24)

# சமுர்த்திப் பணியாளர்களுக்கு கொழும்பில் பயிற்சிப் பட்டறை

வலி.மேற்கு,ஓக.2

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் வலய உதவி முகாமையாளர்களுக்கும் கொழும்பில் எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் மூன்று நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்காக இலங்கை சமுர்த்தி அதிகார சபையினரால் இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பிரதேச செயலகங்களுக்கும் இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்று இலங்கை சமுர்த்தி அதிகார சபையினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஐ-175)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



குப்பிழான் விக்னேஸ்வரா மகாவித்தியாலய பழைய மாணவன்

செல்வன் **குமரேசன் ராகுலன்** அவர்கள்

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி நுண்கலைமன்றத்தால் நடத்தப்பெற்ற தரம் 9.10.11 இற்கான அழகெழுல் சித்திரப் போட்டியில் வெற்றியீட்டி முதலாம் இடத்தைப் பெற்றமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரை நெறிப்படுத்தி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

**- அப்பா, அம்மா, சகோதரர்கள், பாடசாலைச் சமூகம், குப்பிழான் வாழ்மக்கள்.**

(34796) (43-11-15-24)

## இலங்கை வங்கியின் ஆண்டு நிறைவுவிழா

தென்மராட்சி,ஓக.2

இலங்கை வங்கியின் 65ஆவது ஆண்டுப் பூர்த்தி விழா சாவகச்சேரிக்கிளையில் இன்று கொண்டாடப்படவுள்ளது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள வாடிக்கையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

வங்கியினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 14+ சேமிப்புக் கணக்குத் திட்டம் நாளைய தினம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (4-6-117)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 599 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 30-07-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5805550-5820350 |

லக்கினம் மீனம்

வெற்றி இலக்கங்கள்

**06 09 35 47**

ஜக்பொட் பரிசு ரூபா.54,47,150/- வெல்லப்படவில்லை. இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 58,14,875/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,29,323 | 10/- | 32,93,230/- |
| 2.இலக்கங்கள் | 30,196 | 20/- | 6,03,920/- |
| 1.இல + லக்கினம் | 29,902 | 30/- | 8,97,060/- |
| 2.இல + லக்கினம் | 2,791 | 100/- | 2,79,100/- |
| 3.இலக்கங்கள் | 808 | 500/- | 4,04,000/- |
| 3.இல + லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 54,47,150/- | - |
| மொத்தம் | 3,93,099 | - | 62,52,310/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,52,310/-

தொடர் இல. 4843583 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 03ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5814984-0-23
5810526-5-38
5813759-6-40
5807675-2-28
5813255-9-90

## கொழும்புத்துறை கிழக்குக்கு மின்சாரம் கிடைத்தது

கொழும்புத்துறை,ஓக.2

கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்குக் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

போரினால் முற்றாகச் சேதமடைந்திருந்த மின்கம்பங்கள், மின் விநியோக வயர்கள், என்பன மாற்றப்பட்டு அவை புதிதாக இணைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது.

அப்பகுதியில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வீடுகளுக்கும் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இப்பகுதி மக்கள் இராணுவ நிலைகள் மற்றும் மின்சாரம் உள்ள பகுதிகளில் இருந்தும் நீண்ட இணைப்புக்களை ஏற்படுத்தி சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பயன்படுத்தி வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது சட்டபூர்வமாக மின்சாரம் வழங்கப்பட்டதை அடுத்து தொடர்ந்து சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சாரசபை அதிகாரி தெரிவித்துள்ளார். (4-30)

## மட்டுவில் வடக்கில் கிராம அபிவிருத்திச் சங்கம்

சாவகச்சேரி,ஓக.2

மட்டுவில் வடக்குப் பகுதியை உள்ளடக்கி மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 29ஆம் திகதி மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்மராட்சிப்பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.உமாபாலன், மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.கனகரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். சங்கத்தின் தலைவராக டாக்டர் நா.சின்னத்தம்பி தெரிவு செய்யப்பட்டார். (4-31)

## சமகாலக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.2

சர்வதேசத் தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் சமகால அரசியற் கருத்தரங்கின் 17 ஆவது தொடர் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'சமாதான முயற்சிக்கான தடைகளும், உலக நாடுகளின் கொள்கை வகுப்புகளும்' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளார். (-6)



உ

## இணுவில் - கோண்டாவில்
# காரைக்கால் சிவன் கோயில்
# பூங்காவனத் திருவிழா விஞ்ஞாபனம்

*சிவனடியார்களே!*

நிகழும் தாரண வருடம் ஆடி மாதம் 18ஆம் நாள் இன்று (02.08.2004) திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு எம்பெருமானுக்குத் திருக்கல்யாண வைபவம் நடைபெற்று எம்பெருமானின் வீதியுலா நடைபெறும். அதனைத் தொடர்ந்து காரைக்கால் சுவாமியார் அம்பலவாணர் கலையரங்கில் இரவு 8.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

### நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம் 2. வரவேற்புரை
3. தலைமையுரை: செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் (உப அதிபர், யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
4. நாடறிந்த எழுத்தாளர், மூத்த பத்திரிகையாளர் **திரு.செல்லப்பா நடராசா** அவர்கள் பத்திரிகைத் துறையில் 50 ஆண்டு காலம் பணியாற்றியமையை முன்னிட்டு அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தல்.
5. பாராட்டுரைகள்: (1) திரு.துரை எங்கரசு அவர்கள் (அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி)
   (2) ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள் (பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை)
   (3) கலாநிதி நா.அமிர்தலிங்கம் அவர்கள் (அரிமாக்கழகம், இணுவில்)
   (4) திரு.ம.வ.கானமயில்நாதன் அவர்கள் (பிரதம ஆசிரியர், உதயன், சஞ்சீவி)
6. விழா நாயகனைக் கௌரவித்தல் 7. ஏற்புரை: **விழா நாயகன்**
8. பரிசில் வழங்குதல்: சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களைப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தல்
9. கலை நிகழ்வுகள்: (1) பட்டிமன்றம் - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள்
   (2) பண்ணிசை - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள்
   (3) எழுச்சிகீதங்கள் - திரு.வி.பரஞ்சோதி அவர்கள் (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி)
   (4) நாட்டிய நிகழ்வு - செல்வி **அகல்யா அருளானந்தசிவம்** அவர்கள் (ஜேர்மனி, கஸ்தூரி சலங்கை ஒலி நாட்டிய கலாமன்ற நடன ஆசிரியர் திருமதி சாவித்திரி இமானுவேல் அவர்களின் மாணவி)
10. நன்றியுரை: திரு.சே.இலகுநாதன் அவர்கள் (காரைக்கால் சிவன் கோயில் அன்னதான சபை)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இணுவில். (34794) (24-11-15) - விழாக்குழு அமைப்பினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி

**செல்வராசா கீர்த்திகா**

மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் 15 வயதின் கீழ்பிரிவில் குண்டு எறிதல், தட்டு வீசுதல், உயரம் பாய்தல் ஆகிய மூன்று போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தைப்பெற்றுச் சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் தேசிய மட்டப் போட்டியிலும் வெற்றிபெறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**- பாடசாலைச் சமூகம்.**

யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம், மல்லாகம். (34743)(34-11-15-24)

## நம்மை விட்டு நான்கு ஆண்டில்.....

தோற்றம் 30 - 01 - 1942



மறைவு 18 - 07 - 2000

### அமரர் வேலுப்பிள்ளை கனகரட்ணம்
(கவெக்ஸ - A.D.P. பிரதேச செயலகம், சண்டிலிப்பாய)

மண்ணகத்தில் உள்ளவர்கள்
வெளிச்சத்தில் தம் இரு கண்களால்
பார்க்கக் கூடியதை மட்டும் பார்க்கிறார்கள்!
கேட்கக் கூடியதை மட்டும் கேட்கிறார்கள்!
ஆனால்~விண்ணகத்தில் உள்ள நீங்களோ
யாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்!
இந்த நான்கு வருட காலத்தில்
எம் குடும்பத்தில் இணைந்த
புதிய உறவுகள் ~ அதனால்
எம்மை விட்டுத் தூர விலக நினைக்கும்
இரத்த உறவுகள் இன்னும் பற்பல...!
அப்பப்பா!...... தாங்கமுடியாது....
உன் நந்தவனத்தை விட்டு ~ நீ
இறுதிப்பயணம் செய்த வேளை
உன்னுடன் கலந்து கொள்ளாத உறவுகள்....?
எங்கள் துடிப்பு...!
ஐயனே உங்களைத் தவிர யாராலும்
உணர முடியாது!
ஏனெனில் ~ நீங்கள் எங்களுக்குள்ளேயே
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்!.

"செல்வகிரி"
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. - மனைவி, மகள்.

(C/36687)(11-15)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஸ்ரெலா யோண்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியை, யாழ். புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்)

42, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்பொழுது 19 3/6, மிலாகிரியா அவெனியூ, கொழும்பு - 04 இல் வசித்தவருமான திருமதி ஸ்ரெலா யோண்பிள்ளை அவர்கள் 31.07.2004 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அ.யோண்பிள்ளை (இளைப்பாறிய அதிபர், யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் ஆனந்தராஜா, பிலோமினா, கொன்செப்ரா, பிரிசில்லா, கிருபா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரெக்சி, கார்த்திகேசலிங்கம், விஜயகுமார், யோகநாயகம், இரட்ணராஜா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 04-08-2004 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொழும்பு A.F. றேமன்ட் மலர்ச்சாலையில் இருந்து நல்லடக்கத்துக்காக கொழும்பு, கனத்தை கத்தோலிக்க சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19 3/6, மிலாகிரியா அவென்யூ, கொழும்பு - 04.*
T.P.: 0112727784.

தகவல்: யோ. ஆனந்தராசா (மகன்).

(34792) (26-11-15-24)

## திருமதி நடராசா தில்லைநாயகி



நயினாதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா தில்லைநாயகி 31.07.2004 சனிக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் சி.நா.நடராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் செல்வநாதன் (விவசாய ஆராய்ச்சியாளர் - திருநெல்வேலி), சரோஜினிதேவி (கொழும்பு), காலஞ்சென்ற பேரின்பநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசௌந்தரி, தேவமதி, காலஞ்சென்ற இராஜகுலேந்திரன் (நில அளவையாளர்) ஆகியோரின் மாமியாரும் பிரியந்தி மணியழகன் (பிரான்ஸ்), அனுஜந்தினி, தனுஜந்தினி, புராதனி, சுதாகர், தேவகி, வைதேகி, சசிக்குமார் (லண்டன்), குமுதினி, தயாபரன் (லண்டன்), பிரேம்குமார் ஆகியோரின் பேர்த்தியும் நயனன் (லண்டன்) அவர்களின் பூட்டியும் காலஞ்சென்ற பெரியநாயகி காசிலிங்கம் மற்றும் அன்னலட்சுமி கந்தசாமி, சிவபாக்கியம் விசுவலிங்கம் திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2004) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி அளவில் நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8 ஆம் வட்டாரம், நயினாதீவு.* (34798)(34-11-15-24)

தகவல்: ந.செல்வநாதன் (மகன்).

# குரு பெயர்ச்சியால் எத்தகைய பலன் கிட்டும்?

நவக்கிரகங்களில் குரு பகவான் அதி முக்கியத்துவம் பெற்றவராக உள்ளார். இவர் ஒவ்வொரு ராசியிலும் சுமார் ஓராண்டு காலம் தங்கி இருப்பார். அதன்படி 12 ராசிகளையும் அவர் கடந்துவர 12ஆண்டுகள் ஆகும்.

குரு பெரும்பாலும் எல்லா ராசியினருக்கும் நன்மைகளைச் செய்யவே விரும்புவார். அப்படியே அவர் கெடுபலன்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் அந்தக் கெடுபலன் நமக்கு ஒரு படிப்பினையைத் தருவதற்காகத்தான் இருக்கும்.

குரு பகவான் தற்போது சிம்மராசியில் இருந்து கன்னிராசிக்குச் செல்கிறார். குரு பெயர்ச்சி வாக்கிய - பஞ்சாங்கப்படி இந்த ஆண்டு (2004) ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி அன்று நடக்கிறது. (திருக்கணித பஞ்சாங்கப்படி ஓகஸ்ட் 27ஆம் திகதி குருபெயர்ச்சி நிகழ்கிறது) இவர் 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை கன்னி ராசியில் இருப்பார்.

கன்னிராசியில் குரு பகவான் இருக்கும் காலத்தில் அவர் என்னென்ன பலன்களைத் தருவார் என்று ஒவ்வொரு ராசி வாரியாகக் கணித்துக் கொடுக்கப்பட்டு உள்ளது. கோச்சார அடிப்படையில் பலன் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட கிரகத்தை மட்டும் வைத்துப் பலனைப் பார்க்கக்கூடாது.

அதன்படி முக்கிய கிரகங்களான சனி, ராகு, கேது ஆகியவையின் இருப்பிடத்தைக் கொண்டும் ஆராய்ந்து இங்கே பலன்கள் கொடுக்கப்பட்டு உள்ளன.

மேலும் விரைவாகச் சுழலும் செவ்வாய், சூரியன், புதன், சுக்கிரன் மற்றும் சந்திரன் ஆகிய கிரகங்களின் நிலையைக் கருத்தில்கொண்டு பலனைத் தொகுத்துத் தந்துள்ளோம்.

கன்னிராசியில் குரு இருக்கும்போது 2005ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி ராகு - கேது பெயர்ச்சி நடக்கின்றது. இதுவும் இந்தக் கணிப்பில் முக்கியமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், சனி பெயர்ச்சி இந்தக் காலகட்டத்தில் நடக்கவில்லை. அதாவது குரு கன்னியில் இருக்கும் ஓராண்டு காலமும் சனி, மிதுன ராசியில்தான் உள்ளார். இதையும் கணக்கில் வைத்துள்ளோம்.

குரு பெயரும் நாள் வாக்கிய முறைப்படியும் திருக்கணித முறைப்படியும் சற்று முன்பின் வரலாம். ஆனால், பலன்கள் ஒன்றே. எனவே, எந்தப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றுபவராக இருந்தாலும் இந்தப் பலனைப் படித்துப் பயன் பெறலாம்.

## மேடம்

மேட ராசி அன்பர்களே! நீங்கள் எதிலும் முதன்மையை விரும்புவீர்கள். சற்று முன்கோபம் கொண்ட உங்களுக்கு முக்கியத்துவம் இல்லா இடத்தில் தலையை நீட்டமாட்டீர்கள். குரு பகவான் இதுவரை உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளைச் செய்தார்.

அவரால் குடும்பத்தில் மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் கண்டிருக்கலாம். நல்ல பணப்புழக்கத்தைத் தந்திருப்பார். அவர் மட்டும் இன்றி 3ஆம் இடத்தில் இருக்கும் சனியும் பல்வேறு நன்மையைத் தந்துகொண்டிருக்கிறார்.

அவராலும் குடும்பம் வளர்ச்சி அடைந்திருக்கும். மேலும் நீங்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க உதவிபுரிவார். பணப்புழக்கத்தைக் கொடுப்பார். ஆனாலும் நிழல் கிரகங்களான ராகுவும், கேதுவும் உங்களுக்கு நன்மை தரும் இடத்தில் இல்லை.

ராகுவால் உங்கள் முயற்சியில் சிறுசிறு தடைகள் வந்திருக்கலாம். கேது 7ஆம் இடத்தில் இருந்து வீண் மனக்குழப்பத்தை உருவாக்கி இருப்பார்.

மனைவி வகையிலும் சிறுசிறு பிரச்சினை உருவாகி இருக்கலாம். எது எப்படியானாலும் சனி குருவின் பலத்தால் சிறப்பான பலனையே அனுபவித்திருக்கலாம்.

தற்போது குரு பகவான் உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் இருந்து 6ஆம் இடத்திற்கு அடியெடுத்து வைக்கிறார். இது சாதகமான நிலை என்று சொல்ல முடியாது. 5ஆம் இடத்தில் இருந்தது போன்ற நன்மைகளை அவரால் கொடுக்க முடியாது. அதே நேரம் மிகவும் பிற்போக்கான பலனையும் அவர் தரமாட்டார்.

பொதுவாக 6ஆம் இடத்தில் இருக்கும் குரு உடல் நலத்தைப் பாதிப்புக்குள்ளாக்குவார். மனதில் தளர்ச்சியை ஏற்படுத்துவார் என்பது ஜோதிட வாக்கு. ஆனாலும் மற்றைய கிரகங்களின் நிலையைக் கணக்கிட்டால் இந்தப் பாதிப்புகள் உங்களை ஒன்றும் செய்யாது.

குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 9ஆம் இடத்துப் பார்வை மிகவும் சாதகமாகக் காணப்படுகிறது. குரு வின் பார்வைக்கு கோடி நன்மைகள் உண்டு என்பார்கள். குருவின் பார்வை மூலம் எந்த இடையூறுகளையும் தடுத்து நிறுத்தலாம்.

இதுதவிர ராகு–கேது பெயர்ச்சி 2005ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி நடக்கிறது. அப்போது உங்கள் ராசியில் இருக்கும் ராகு 12ஆம் இடத்திற்குச் செல்கிறார். இதுவும் சாதகமான நிலை அல்லதான். ஆனால் தற்போது நிலவும் தடைகள் அடியோடு மறையும்.

ஆனால் ராகுவால் அதன்பின் அநாவசிய செலவுகள் வரலாம். அதே நேரம் கேது 7ஆம் இடத்தில் இருந்து 6ஆம் இடத்திற்கு வருகிறார். இது மிகவும் சிறப்பான நிலைதான். பணப்புழக்கத்தைக் கொடுப்பார். குருவுடன் கேது இணைந்த பிறகு நல்லகாலம் மேலும் அதிகரிக்கும்.

காரணம் குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் கேது அவரோடு இணைந்த பின்னர் (2005ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதிக்குப் பின்னர்) குரு வேதையில் சிக்கிக் கொள்கிறார். அதாவது குருவுக்கு வேதையாகக் கேது இருப்பார்.

வேதையில் சிக்கிய கிரகத்தால் செயற்பட முடியாமல் போய்விடும். அந்தவகையில், கெடுபலனைச் சாதகமற்ற இடத்தில் இருக்கும் குரு செயற்பட முடியாமல் இருப்பது உங்களுக்கு நல்லதுதானே.

அதேபோல பெப்ரவரி 28ஆம் திகதி ராகு உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்திற்கு வந்தபின் அவருக்கு வேதையாக சனி இருப்பார். எனவே, ராகுவாலும் உங்களுக்குக் கெடுபலனை கொடுக்க முடியாது.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது குரு சாதகமற்ற நிலைக்குச் சென்றாலும் உங்களை எந்த வகையிலும் பாதிப்புக்கு உள்ளாக்காது. நன்மைகள் கிடைக்கவே வாய்ப்பு உண்டு. அதன் அடிப்படையில் விரிவான பலன்களை இனிக் காணலாம்.

நீங்கள் எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியும். பணப்புழக்கம் கடந்த காலத்தைவிட எந்தவிதத்திலும் குறையாது. குரு இடம் மாறுவதால் உங்கள் செல்வாக்கு முன்போல் இருக்காது. ஆனாலும் உங்கள் கௌரவத்திற்கு எந்தப் பங்கமும் வராது.

சிலர் சொத்து சுகம் வாங்கலாம். புதிய வாகனம் வாங்க யோகம் உண்டு. குறிப்பாக 2005 பெப்ரவரிக்குப் பிறகு அனுகூலங்கள் அதிகரிக்கும். மொத்தத்தில் பொருளாதார வளம் இருந்து கொண்டே இருக்கும்.

குடும்பம் – வசதிக்குக் குறை இருக்காது. வீட்டுக்கு தேவையான வசதிகள் கிடைக்கும். விருந்துவிழா என சென்று வருவீர்கள். கணவன் – மனைவி இடையே ஒற்றுமை ஏற்படும்.

மனைவி வகையில் இருந்து வந்த பிரச்சினை அனைத்தும் பெப்ரவரிக்குப் பிறகு மறையும். அதன்பின் அனுகூலங்கள் அதிகரிக்கும். அதுவரை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. அதேபோல் ராகு ராசியில் இருப்பதால் உறவினர்கள் வகையிலும் மனஸ்தாபம் வரலாம்.

அதுவும் பெப்ரவரிக்குப் பிறகு மறைந்து ஒற்றுமை ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் உடனடியாக நிறைவேறாமல் போகலாம். ஆனாலும் உங்கள் தீவிர முயற்சியால் இறுதியில் கைகொடுக்கும். அது நல்ல வரனாகவும் அமையும். குழந்தை பாக்கியம் பெறுவீர்கள்.

உத்தியோகம் – கடந்த காலம் போல சிறப்பை பெற முடியாது. அதற்காக பிற்போக்கான நிலை உருவாகாது. உங்கள் உழைப்புக்கு தகுந்த மரியாதை வளர்ச்சி கிடைக்கும். மேல் அதிகாரிகள் மத்தியில் உங்கள் செல்வாக்கு குறையாது.

அதே நேரம் உங்கள் கோரிக்கையை கேட்டுதான் பெற வேண்டியிருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். அலைச்சல் ஏற்படும். உங்கள் பொறுப்புகளைப் பிறரிடம் ஒப்படைத்து விடவேண்டாம். முயற்சி எடுத்தால் பதவி உயர்வு காணலாம்.

வியாபாரம் – நல்ல இலாபத்தை காணலாம். பொருளாதார வளம் சிறப்பாகவே இருக்கும். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் புதிய தொழிலை ஆரம்பிக்கலாம். 2005 மார்ச் மாதத்திற்குப் பிறகு தொழில் மேலும் சிறப்படையும். சிலருக்கு வெளிநாடு சென்று வரும் வாய்ப்புக் கிடைக்கும்.

ராகுவால் அவ்வப்போது பொருள் விரயம் ஏற்படலாம். சிக்கனமாக இருப்பது நல்லது. கூட்டாளிகள் இடையே ஒற்றுமை இருக்கும். சிலர் மனத்தளர்ச்சியுடன் காணப்படுவர். சோம்பலை விடுவித்து சுறுசுறுப்பை வரவழைத்து வெற்றி காண்பது நல்லது.

## இடபம்

இடபராசி அன்பர்கள் அமைதியான அறிவுபூர்வமான எண்ணம் கொண்டவர்கள். படாடோபம் இல்லாமல் எடுத்த காரியத்தை எப்பாடுபட்டாவது வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அதில் ஏற்படும் தடைகள், தடங்கலை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டீர்கள்.

நீங்கள் தற்போது ஏழரைச் சனியால் அதிகமாகவே பாதிக்கப்பட்டிருப்பீர்கள். கூடுதல் உழைப்புக் கூடிவராத சுகங்கள், எட்டாத எண்ணங்கள், எட்டிக்காயான வாழ்க்கை, கொட்டாத பணம், கொடுக்க முடியாத கரம் என உங்கள் நிலை சற்று மோசமானதாகவே இருந்திருக்கும்.

சனி மட்டுமின்றி குருவும் சாதகமாகக் காணப்படாததால் இந்த இன்னலுக்கு ஆளாகி இருப்பீர்கள். ஆனாலும்

கேது உங்கள் ராசிக்கு ஆறாம் இடத்தில் இருந்து ஓரளவு பணப்புழக்கத்தைத் தந்து உங்களைத் துன்பமென்னும் ஆழ்கடலில் தள்ளவிடாமல் பாதுகாத்து கொண்டிருப்பார்.

குருபகவானை பொறுத்தவரை அவர் உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் இருந்து பல்வேறு இன்னலை தந்திருப்பார். அவர் குடும்பத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கி இருப்பார். உறவினர்களிடையே வீண் விரோதம் வந்திருக்கும்.

கணவன்–மனைவி இடையே பிணக்குகள் ஏற்பட்டு இருக்கும். தூரத்து உறவினர் வகையில் விரும்பத்தகாத சம்பவங்களும் நடந்து இருக்கலாம். நாம் ஏற்கனவே சொன்னபடி குரு பகவான் மட்டும் கடந்த காலத்தில் உங்களுக்கு கெடு பலனை தரவில்லை.

சனியும் கூட 2ஆம் இடத்தில் இருந்து பல்வேறு இன்னல்களைத் தந்திருப்பார். அவர் பொருள் இழப்பை தந்திருப்பார். மேலும் குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைகளைத் தந்திருப்பார். மேலும் ராகு 12இல் இருந்து தன் பங்கிற்கு பணவிரயத்தை உருவாக்கி இருப்பார். ஆனால் இதை கேது 6ஆம் இடத்தில் இருந்து ஈடுகட்டியிருப்பார்.

தற்போது குரு பகவான் உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்துக்கு செல்கிறார். இது மிகவும் சிறப்பான நிலை. 5ஆம் இடத்தில் குரு பகவான் இருக்கும்போது குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தருவார்.

திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். பொருளாதார வளத்தை அதிகரிக்கச் செய்வார். பெண்களால் மேன்மை கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். இதனால் வாழ்க்கையில் வளம் காணலாம்.

பொதுவாக கோச்சாரப் பலனைப் பார்க்கும்போது மற்றைய முக்கிய கிரகங்களையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சனி பகவான் நாம் ஏற்கனவே கூறியபடி 2ஆம் இடத்தில்தான் தொடர்ந்து இருப்பார். அவரால் தற்போது நன்மை தரமுடியாது.

ஆனால் இது ஏழரைச் சனியின் கடைசிக் காலகட்டம் என்பதால் அவர் சில பிரச்சினைகளைத் தந்தாலும் அதை ஈடுகட்டும் வகையில் நன்மைகளைத் தரவும் தவறமாட்டார். இதுதவிர சனியின் 10ஆம் இடத்து பார்வை சிறப்பாக உள்ளது. இதன்மூலம் அவர் நல்ல பணப்புழக்கத்தை கொடுப்பார்.

2005 பெப்ரவரி 28ஆம் திகதி ராகு–கேது பெயர்ச்சி நடக்கிறது. அப்போது கேது சாதகமற்ற 5ஆம் இட த்திற்கு வந்தாலும் ராகு 12ஆம் இடத்தில் இருந்து 11ஆம் வீட்டிற்கு செல்வது சிறப்பு.

அதன்பின் பொருள் இழப்பு குறையும். சேமிப்பு அதிகரிக்கும். கேது சாதகமற்ற இடத்திற்கு சென்றாலும் அவருக்கு வேதையாக ராகு இருப்பார். அதன் காரணமாக அவரால் கெடுபலன் செய்ய முடியாது.

மேற்சொன்ன விளக்கத்தில் இருந்து பார்க்கும்போது குரு மட்டுமின்றி கேதுவும் அவரை தொடர்ந்து ராகுவும் நற்பலன்களை தருவார்கள். சனியாலும் அவ்வளவு தீமைகள் நிகழாது என்பதை விளக்கமாக கண்டோம்.

எனவே, இந்த குரு பெயர்ச்சி காலம் மிகச்சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகம் வேண்டாம். எந்தெந்த வகையில் சிறப்பு பலனைக் காணலாம் என்பதைப் பார்ப்போம்.

உங்கள் முயற்சியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியும். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். வேண்டிய பொருள்களை வாங்குவீர்கள். கண்ணில் கண்ட பணம் நொடிப்பொழுதில் காணாமல் போன மாயஜாலவித்தை இனி நடக்காது.

கையில் பணம் தங்கும். சேமிப்பு அதிகரிக்கும். மதிப்பு மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீது இருந்த

சோதிட வித்தகர் காழியூர் நாராயணன்

பொல்லாப்பு மறையும். சிலர் புதிய சொத்து வாங்குவர். புது வீடு கட்டவும் வாய்ப்பு உண்டு.

குடும்பம் – எண்ணற்ற பிரச்சினையில் சிக்கி தவித்த உங்களுக்கு இது மகிழ்ச்சியை அளிக்கும் காலம். உறவினர்கள் வகையில் இருந்து வந்த பூசல்கள் மறையும். அவர்கள் வகையில் அனுகூலம் பிறக்கும். அவர்களால் நன்மையும் கிடைக்கும்.

கணவன்–மனைவி இடையே ஒற்றுமை ஏற்படும். பிரிந்து இருந்த குடும்பம் ஒன்று சேரும். தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சிறப்பான வரனாகவும் அது அமையும். சிலர் வசதியான வீட்டுக்கு குடிபுகுவர்.

வாகனம் வாங்க வாய்ப்பு கிடைக்கும். விருந்து, விழா என்று சென்று வருவீர்கள். சிலருக்கு கோவில்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். பெரியோர்களின் ஆலோசனையும் கிடைக்கப்பெறுவீர்கள். புத்தாடை அணிகலன்கள் வந்து சேரும்.

உத்தியோகம் – கடந்த காலத்தில் எண்ணற்ற அலைச்சலுக்கும் உபாதைகளுக்கும் ஆளாகி இருப்பர். எவ்வளவுதான் அதிக உழைப்பைச் சிந்தினாலும் அதற்கான பலன் கிடைக்காமல் இருந்திருக்கும். இந்த நிலை இனிமாறும். சிறப்பான பலனை எதிர்பார்க்கலாம்.

தடைப்பட்ட பதவி உயர்வு இனிக் கிடைக்கும். தட்டி பறிக்கப்பட்ட பொறுப்பு மீண்டும் கிடைக்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். சிலர் அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவர். விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கும்.

சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பர். ஏதோ காரணத்தால் வேலையை இழந்தவர்கள் மீண்டும் வேலையை பெறலாம். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். சிலர் வேலை விடயமாக குடும்பத்தை விட்டு தற்காலிகமாக பிரிந்திருக்க நேரிடலாம்.

வியாபாரம் – படிப்படியாக வளர்ச்சி காண்பர். பின்தங்கிய நிலைமாறும். இலாபம் அதிகரிக்கும். நல்ல பணப்புழக்கத்தோடு காணப்படுவர். பழைய கடன்கள் அடைபடும். எதிரிகள் வகையில் இருந்து வந்த இடையூறுகளை முறியடிப்பர். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும்.

சிலர் வியாபாரத்தை விரிவுபடுத்துவர். ஆனால் அதற்காக அதிக பணத்தை முதலீடு செய்ய வேண்டாம். உங்கள் மூளையை பயன்படுத்தி முன்னேற்றம் காண்பீர்கள்.

(வளரும்)

# சமாதானப் பேச்சுக்கள் தாமதமானால் சர்வதேச கவனம் வேறுபக்கம் திரும்பும்

## அமெரிக்கப் பிரதிநிதி எச்சரிக்கை

கொழும்பு,ஓக.2

மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்புங்கள் என்று அமெரிக்கா இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் வற்புறுத்தியுள்ளது.

மீண்டும் போர் ஆரம்பமாகக் கூடிய நிலைமை உருவாகிவருவதாக நோர்வே வெளியுறவு துணை அமைச்சர் விடர் ஹெல்கிசன் எச்சரிக்கை விடுத்த இரண்டு நாள்களில் அமெரிக்காவின் இந்த வற்புறுத்தல் வந்துள்ளது.

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு வந்திருந்த அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தென் ஆசிய விவகாரத்துக்கான பிரதம பிரதி உதவி செயலாளர் டொனால்ட் கேம்ப அமெரிக்க அரசின் இந்த வற்புறுத்தலை வெளியிட்டார்.

அவர்கள் மீண்டும் பேச்சுக்குத் திரும்ப வேண்டும் இதுவே இன்று முக்கிய விடயம் என்று அவர் கூறினார்.

யுத்த சூழ்நிலை உருவாக்கி வருவதாக நோர்வே துணை அமைச்சர் வெளியிட்ட கருத்தை இலங்கை ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மறுத்திருந்தபோதிலும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு ஆதரவாகவே அமெரிக்க செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இலங்கையின் அமைதி முயற்சி விடயத்தில சர்வதேச சமூகத்தின் பொறுமை சோதிக்கப்படுகிறது என நோர்வேப் பிரதி அமைச்சர் கருத்து வெளியிட்டிருந்த அதேவேளை இலங்கையின் அமைதி முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படாதிருப்பதானது நிதிவழங்கும் சமூகம் வேறுதிசைகளில் கவனம் செலுத்த வேண்டிய நிலையை ஏற்படுத்திவிடும் என்று அமெரிக்கப் பிரதி உதவிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதைவிட மிகவும் தேவைப்படும் நாடுகளுக்கு அவர்களின் கவனம் திரும்பிவிடும் என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

அமெரிக்கப் பிரதி உதவிச் செயலாளர் டொனால் கேம்ப் மேலும் தெரிவிக்கையில் பொதுவில் எல்லோருமே நல்ல நோக்கத்தையே கொண்டிருக்கிறார்கள். பிரச்சினை என்னவென்றால் இந்த நல்ல எண்ணத்தை எவ்வாறு நல்லபடியாக மாற்றுவதுதான் என்றார் அவர். டொனால்ட் கேம்ப் பத்திரிகையாளர்களை சந்திப்பதற்கு முன் பிரதம மந்திரி மகிந்தராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சமாதானச் செயலக அதிகாரிகள் ஆகியோரைச்சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இலங்கையில் அமைதியும் பாதுகாப்பும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அதிக சாவதேச முதலீடுகளும், அபிவிருத்தியும் ஏற்பட முடியும்.

அண்மையில் பிரஸஸ்ஸில் கூடிய நான்கு இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளும் கூட அமைதி முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் சர்வதேச நாடுகளின் கவனம் வேறு திசையில் திரும்பிவிடக்கூடும் என்று எச்சரித்திருந்தன். இலங்கை அமைதி முயற்சிக்கு வாஷின்ரனில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட போதிலும் பல முக்கியமான வேறு பிரச்சினைகள் கவனத்தைத்திருப்பும் வகையில் கதவில் தட்டிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் புதிய அதிபராக தெரிவுசெய்யப் பட்டாலும் கூட வெளிநாட்டுக் கொள்கையில் பெரிய மாறுதல் ஏற்படப்போவதில்லை. ஆனால், இலங்கை விவகாரத்தில் அதிக நாட்டம் காட்டி வந்துளள ராஜாங்க பிரதிச் செயலாளர் றிச்சார்ட் ஆர்மிடேச் மற்றும் அதிகாரிகள் மாற்றப்படும் பட்சத்தில் அந்த அக்கறை இல்லாமல் போய்விடலாம என்றும் எச்சரிக்கை செய்தார் டொனால்ட் கேம்ப.

கிழக்கிலங்கையில் விடுதலைப் புலிகளுக்கிடையில் ஏற்பட்ட பிரிவின் பின்னர் ஆரம்பமான வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். அமைதி முயற்சியில் தேக்கம் ஏற்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணம் என்றும் அவர் தெரிவித்தார். (ப)

## நமது பாரம்பரிய ஆதிக்கப் போக்கு

# இக்கட்டான நிலைக்கு நாட்டை இட்டுச் சென்றுள்ளது

### பிரட்மன் வீரக்கோன் தெரிவிக்கிறார்

கொழும்பு,ஓக.2

நாடு இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கின்றது. மிக ஆழமான பல கேள்விகளுக்கு முகம்கொடுத்து விடைகான வேண்டிய இக்கட்டான நிலையில் நாடு இருக்கின்றது.

முன்னாள் சிவில் சேவையாளரும், முன்னாள பிரதமர்களுக்கு ஏழுமுறை செயலாளராகப் பணியாற்றியவரும் முன்னாள் ஜனாதிபதி ஆலோசகருமான பிரட்மன் வீரக்கோன் இவ்வாறு கூறியுள்ளார். இலங்கை வர்த்தக்கழகத்தின் 165ஆவது வருடாந்த மாநாட்டில் அவர் உரை நிகழ்த்தினார். தனது 50 ஆண்டு அனுபவங்களை வைதது அவர் எழுதிய நூலின் அறிமுக நிகழ்வை ஒட்டியும் இந்த உரை இடம்பெற்றது.

ஒத்துவாழும் கொள்கையானது நமது மத்தியில் உள்ள பல அடிப்படை முரண்பாடுகளைத தீர்த்து உறவுப்பாலத்தைப் பலப்படுத்தியிருக்க வேண்டும் ஆனால் எமது பாரம்பரியமான ஆதிக்கப் போக்கானது அதனை நடைமுறைச் சாத்தியமற்றதாக்கிவிட்டது. நாட்டுக்குள்ளே காணப்படுகின்ற பிரிவினைகள், இனம், மதம் மற்றும் வகுப்பு அடிப்படைகளில் அபாயகரமான வகையில் பன்முகக் கோலம் கொண்டுவிட்டன என்றார் பிரட்மன் வீரக்கோண்.

அவர் மேலும் பேசுகையில் தமது நூலின் குறிக்கோள் பற்றி விளக்கினார். இலங்கை இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இக்கட்டான நிலையில் இருக்கின்றது. மிக ஆழமான பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டிய நிலையில் நாடு இருக்கின்றது என்று அவர் சொன்னார். (ப)

# தகவல் தொடர்பாடல் சான்றிதழ் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஓக.2

தேசியப் பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் சுழிபுரத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேசிய சான்றிதழ் பயிற்சிநெறிக்கான (என்.சி.ஐ.சி.ரி.) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாது. கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும். அல்லது ஏதேனும் நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது ஏதேனும் மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன், ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சையில் ஏதேனும் இருபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

சுயவிவரங்களை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை *'மாகாணப் பணிப்பாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இல. 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம்'* என்னும் முகவரிக்கு எதிர்வரும் 20ஆம திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-201)


**IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2004/2005**

புதிய நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் முற்றிலும் வித்தியாசமான முறையில் எமது முதலாவது புலமைப்பரிசில் திட்டத்தினை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.



விண்ணப்ப முடிவு திகதி 12.08.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது
உங்கள் திறமைகளுக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம்.

எமது புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக கற்கை நெறியில் இணைந்து கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் முற்றிலும் இலவசமான ஆங்கில வகுப்புகள் வடக்கின் பிரபல ஆங்கில ஆசிரியரினால் வழங்கப்படவுள்ளது.

DIPLOMA IN MICROSOFT OFFICE 3 Months
DIPLOMA IN DESK TOP PUBLISHING 3 Months
DIPLOMA IN INTERNET TECHNOLOGY 3 Months
DIPLOMA IN HARDWARE ENGINEERING 4 Months

மாதிரி விண்ணப்பப் படிவத்தினை சுயமாகத் தயாரித்து, பூர்த்திசெய்து ரூபா 100 பரீட்சைக் கட்டணத்துடன் (19 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குப் பரீட்சைக்கட்டணம் ரூபா 50 மட்டும்) கீழ்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால மூலமாகவோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர் DIRECTOR, IBMS என்று பெயரிட்டு பணம் பெறும் நிலையம POST OFFICE, JAFFNA. எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் வந்து சேரவேண்டிய முகவரி : DIRECTOR, IBMS, 410, K.K.S. ROAD, JAFFNA.

Institute of Business Management Studies
"The Centre for Information Technology"
Head Office: # 410 , K.K.S. Road, Jaffna. T.P : 021 222 3165
Branches: ★ N.M.M.V. Road, Nelliady. ★ Sangathannai, Chavakachcheri.


## சமய சந்நிதிகளில்

மட்டுவில் தெற்கு, குறுமுனி அம்மன் ஆலயத்தில் சங்காபிஷேகம் இன்று காலை 9 மணி முதல் நடைபெறும்.

விஷேட பூசை, அம்பாள் திரு வீதி உலா ஆகியன இடம்பெறும்.

இன்று இரவு விஷேட மேளக்கச்சேரி, வில்லிசை, இன்னிசை நிகழ்வு ஆகியன இடம்பெறவிருக்கின்றன. (3)

★ ★ ★

குருநகர்,ஓக.2

நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஆராதனைகள் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து ஓகஸ்ட் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு நற்கருணை நாதர் திருப்பவனியும் ஆராதனையும் நடைபெறும்.

மறுநாள் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி, மாலை 6 மணிக்கு அன்னையின் திருச்சொரூப தேர்ப்பவனி என்பன இடம்பெறும். (3-51)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.2

நீர்வேலி காமாட்சி அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நீர்வேலி சனசமூக நிலையத் தலைவர் சி.அருந்தவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலி. கிழக்கு உதவி பிரதேச செயலாளர் க.இராஜதுரை பிரதமவிருந்தினராகவும் நீர்வேலி அரசியல்துறைப் பொறுப்பளர் சி.யாழவன், தேசிய எழுச்சிப் பேரவை ந.சிவகடாட்சம் ஆகியோர் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-110)

## உதைபந்தாட்டம்

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வலி-கிழக்குப பிரதேச சபையினால் சனசமூக நிலையங்களுககு இடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆவரங்கால் கிழக்கு வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பி.ப. 3.30 மணி - புத்தூர் கிழக்கு மகாத்மா காந்தி ச.ச.நிலைய அணி எதிர் அச்செழு வளாமதி ச.ச.நிலைய அணி.

★ பி.ப 4.30 மணி - ஆவரங்கால் விவேகானந்தா ச.ச.நிலைய அணி எதிர் அச்சுவேலி நவோதயா ச.ச.நிலைய அணி. (ஐ-3)

# யாழ். அணி எட்டு ஓட்டங்களால் வவுனியா அணியைத் தோற்கடித்தது

வவுனியா,ஓக.2

வவுனியா சென்ரலைட் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ். அணி வவுனியா அணியை 8 ஓட்டங்களால் தோற்கடித்தது.

வருடா வருடம் இவ்விரு மாவட்ட அணிகளுக்குமிடையில் இடம்பெறும் கிரிக்கெட் போட்டியின் தொடராக இந்த ஆட்டம் அமைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. யாழ். அணி வீரர்களான யதார்த்தன், சிவராஜ், யசிந்தன், ஐங்கரன் ஆகியோர் முறையே 66, 48, 32. 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

வவுனியா அணி வீரர்களான வினோத் 32 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுக்களையும், கௌசிகன் 48 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்துக்களமிறங்கிய வவுனியா அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றபோது ஓவர்கள் முடிவடைந்தன.

யாழ். அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

வவுனியா அணி வீரரான ஜினகன் சிறப்பாக ஆடி 76 ஓட்டங்களைப்பெற்றார். யாழ். அணி வீரர்களான ரஜித் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், லொயிட் 50 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சிறப்பு ஆட்டக்காரராக வவுனியா அணிவீரரான ஜினகன் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ-3)

## பெண்களுக்கான கடலகப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியினால் நடத்தப்படவுள்ள பெண்களுக்கான கடலகத் தொழில் நுட்பவியல் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி விண்ணப்பமானது 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி, 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (4-6-201)

## கடுகதி சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.2

தெல்லிப்பழையிலிருந்து முகமாலைக்கு கடுகதிச் சிற்றூர்திச் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி சேவை தெல்லிப்பழை, சுன்னாகம், மட்டுவில், புத்தூர்ச் சந்தி ஊடாக முகமாலைக்குச் சென்றடைந்து மீண்டும் அதே வீதி வழியாக தெல்லிப்பழையை வந்தடையும்.

இதேவேளை - காரைநகர் மற்றும் மாதகல் ஆகிய பகுதிகளிலிருந்தும் முகமாலைக்கான கடுகதிச் சிற்றூர்திச் சேவைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகச் சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது. (4-6-201)


**பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்**



மக்கள் வங்கிச் சேவையில் 1972 இல் கால் பதித்த

**உயர்திரு. துரைசிங்கம் ரகு**
B.A, A.I.B, PGD IN Pub.Admin.

**திருமதி பத்மலோஜனி ரகு** B.A.(Hons)

இருவருக்கும் உதவிப் பிராந்திய முகாமையாளராக அண்மையில் பதவி உயர்வு கிடைத்தமையையிட்டு மனமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம். திரு. ரகு அவர்கள் வங்கிச் சேவையிலுள்ள தமிழ் உத்தியோகத்தர்களின் நன்மை கருத இரு வங்கிசார் துணை நூல்களை எழுதிப் பெருமை சேர்த்துள்ளார். இவருடைய தகப்பனார் துரைசிங்கம் அவர்கள் எனது ஆங்கில ஆசான் மட்டுமல்லாது, எனது தந்தையார் "ஸ்கந்தாவின" அதிபராகவிருந்த காலத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்கு, எனது தந்தையாரெடுத்த சகல முயற்சிகளுக்கும் உறுதுணையாகவிருந்தவர்.

திரு. திருமதி ரகு அவர்கள் மேலும் பதவி உயர்வு பெற்றுச் சீருடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

V.S.சிவரெட்ணம்.J.P, மக்கள் வங்கி மதிப்பீட்டாளர், விலைமதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(சி.36690)(43-11-15)

## கிளிநொச்சியில் உதயன் பணிமனை

செய்திகள்
விநியோகம்
விளம்பரம்
சம்பந்தமான சகல தொடர்புகளுக்கும்...

இல: 167, ஏ-9 நெடுஞ்சாலை,
கிளிநொச்சி.

## வேலையற்ற பட்டதாரிகள் சங்க மறியற்போராட்டம்

மேற்படி விடயம் இன்று (02.08.2004) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.செயலகம் முன்னால் நடைபெற உள்ளதுடன் பட்டம் பெற்ற மூப்பு அடிப்படையில் பதிவுகளும் மேற்கொள்ளப்படவிருப்பதால் அனைத்துப் பட்டதாரிகளும் தவறாது சமுகந்தரவும்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்,
யாழ்ப்பாணம். (34805)(2914-17) -செயலாளர்.

## கண்ணீர்க் காணிக்கை

எமது அன்பு நண்பனும் இனுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவனுமாகிய

**செல்வன் பஞ்சாட்சரம் கஜேந்திரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இனுவில் இந்துக் கல்லூரி.
2001 ஆம் ஆண்டு கலை/வர்த்தக பிரிவு மாணவர்களும் நண்பர்களும்.
(சி-36694)(29-14-17)

## இலவச மருத்துவ சேவையும் நற்செய்திக் கூட்டங்களும்

தென்கொரிய தேசத்திலிருந்து வரும் வைத்திய நிபுணர்கள் இலவச மருத்துவ சேவை வழங்குகிறார்கள்

இடம்: இம்மானுவேல் சுவிசேஷ சபை மண்டபம்
புதிய பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

### மருத்துவ சேவை வழங்கப்படும் நாள்களும் நேரமும்

| | |
|---|---|
| 03.08.2004 | செவ்வாய் பிற்பகல் 03.00 மணி தொடக்கம் 06.00 மணி வரை |
| 04.08.2004 | புதன் காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை |
| | பிற்பகல் 02.00 மணி தொடக்கம் 05.00 மணி வரை |
| 05.08.2004 | வியாழன் காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை |
| 06.08.2004 | வெள்ளி காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை |
| | பிற்பகல் 02.00 மணி தொடக்கம் 05.00 மணி வரை |
| 07.08.2004 | சனி காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை |
| | பிற்பகல் 02.00 மணி தொடக்கம் 05.00 மணி வரை |

### நற்செய்திக் கூட்டங்கள் நடைபெறும் நாள்களும் நேரமும்

| | |
|---|---|
| 06.08.2004 | வெள்ளி மாலை 05.30 மணி தொடக்கம் 07.00 மணி வரை |
| 07.08.2004 | சனி மாலை 05.30 மணி தொடக்கம் 07.00 மணி வரை |
| | காலை 09.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை |
| 08.08.2004 | ஞாயிறு மாலை 05.30 மணி தொடக்கம் 07.00 மணி வரை |

தகவல்:
போதகர் தேவதாஸ் அன்ரன்,
இம்மானுவேல் சுவிசேஷ சபை,
புதிய பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
(34804)(29-17-14)

## பரிசாரகர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஓக.2

விபத்தினால் காயமடைந்ததாகத் தெரிவித்து மருந்து கட்டுவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற இளைஞர்கள் அங்கு பணியிலிருந்து பரிசாரகரைத் தாக்கினர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இடம் பெற்றுள்ளது. அங்கு கடமையாற்றும் கு.மகாலிங்கம் எப்பவரே தாக்கப்பட்டவராவார்.

தாக்கிய இளைஞர்கள் உடனடியாகவே அங்கிருந்து வெளியேறிவிட்டனர் எனவும் கூறப்பட்டது.

(எ-9)

## முகிழ்நிலை ஆசிரியர் பெறுபேறு வெளியானது

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில கடந்த வருடம் நடந்த இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி, தற்சமயம் உள்ளகப் பயிற்சி பொது முகிழ்நிலை ஆசிரியர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

முடிவுகளைக் கல்லூரியில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-3)

## ENGLISH SPOKEN AND GRAMMAR

*BY: BRITTO*

புதிய பிரிவு செவ்வாய், வியாழன் மாலை 4 மணி
ஆரம்பம்: 04.08.2004 புதன் 4 மணி
இடம்: கொக்குவில்
(ஞானபண்டிதர் வித்தியாசாலை அருகில்)
(சி-36673)(29-14-17)

## மரண அறிவித்தல்

### முத்தையா இராசலிங்கம்

(முன்னாள் கொழும்பு வர்த்தகர்)



கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், தேவாலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட முததையா இராசலிங்கம் அவர்கள் 30-07-2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - லக்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற காங்கேசு - இராசமுத்து ஆகியோரின் மருமகனும் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் ஜெயகாந்தன், சசிகாந்தன் (ஜேர்மனி) கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாமோதரம்பிள்ளை (கனடா), செல்லத்துரை (கொழும்பு), புவனேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினசபாபதி (வவுனியா), சபாநாதன், பாலசுந்தரம (காலஞ்சென்ற பொலீஸ் சார்ஜன்), பாலகிருஸ்ணன் (கொழும்பு), ரூபராணி (ஜேர்மனி), இளங்கோவன் (லண்டன்), பரமேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் பிரமிளா, சுசித்திரா ஆகியோரின் மாமனாரும் தட்சாயினி, மதுசாயினி, ததுர்சிகா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தேவாலய வீதி,*
சங்கானை.
தகவல்:
ஜெயகாந்தன் (மகன்).
(348112)(38-29-14-17)


நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
ரஜனிகாந்த, நக்மா, ரகுவரன், இளகராஜ் நடித்த
பாட்ஷா

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/36662) (12)

லக்சுமி இனுவில்
விஜய், த்ரிஷா, பிரகாஸ்ராஜ் நடித்த

கில்லி
புதிய நேரம் 11.00, 3.00, 7.00
(34806) (12)

நிரஞ்சனாஸ் சங்கானை
ஜூனியர் சிவாஜி துஷ்யந்த், சுபா, பூஜா நடித்த
மச்சி
தினசரி: 11.00, 2.45, 6.00 புது
வெள்ளி, சனி, ஞாயிறு
Saving Private Ryal [இரவு 8.45] புது
(C-36658)(12)

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன், மீனா, நெப்போலியன் நடித்த

அன்பு சகோதரன்
புதிநேரம்: 10.30,2.30,6.30,9.30.
(சி-36364)(12)


## கண்ணீர்க் காணிக்கை



எமது சக நண்பன் S.சுதேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

**சுப்பர் சுப்பிரமணியம்**

நேற்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

சக நண்பர்கள் (யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்)
(34810)(38-29-14-17)

## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவன கட்ட்டப் பகுதியின் நிர்வாக உத்தியோகத்தர் திரு. S.சுதேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை



**சுப்பர் சுப்பிரமணியம்**

அவர்கள் நேற்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த துயரைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**Tilko Holidays (pvt) Ltd.**
305, Main Street,
Jaffna (34811)(22-29-14-17)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பர் சுப்பிரமணியம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், டச்சு றோட், வீமன்காமம் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் செட்டித்தெரு, நல்லூரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் சுப்பிரமணியம் நேற்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் வைத்திலிங்கம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இந்துமதியின் அன்புக் கணவரும் கருணேஸ்வரன் (Golden Eagle Security), லோகேஸ்வரன் (ஜேர்மனி), சுதாமதி, சுதேஸ்வரன் (Tilko Holidays Pvt.Ltd.) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மேரி அன்றீற்றா, பரமேஸ்வரி (ஜேர்மனி), ரவீந்திரன் (யா/மாநகரசபை பாதுகாவலர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மூபரூபன், கஜரூபன், ரஷ்ரூபன், பானுஜா, இந்துஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் இராசையா, பூமணி, காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் சுவாமிநாதன், பொன்னம்மா, சண்முகம், இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2004) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/33, செட்டித் தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
(சி-36693)(43-17-14)
தகவல்:
குடும்பத்தினர்.

### பஞ்சாட்சரம் கஜேந்திரன் (கஜன்)

(பழைய மாணவன் - இனுவில் மத்திய கல்லூரி, இனுவில் இந்துக். கல்லூரி)

இணுவில் மேற்கு, செட்டிவளவு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் கஜேந்திரன் 30.07.2004 வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமானார்.



அன்னார் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் விஜியேந்திரன் (நோர்வே), விஜியமாலினி (சுவிஸ்), விமலேந்திரன் (சுவிஸ்), விபுலேந்திரன் (பிரான்ஸ்), வல்வேந்திரன் (இலங்கை), லவேந்திரன் (பிரான்ஸ்), குசேந்திரன் (இலங்கை), சுவேந்திரன் (இலங்கை), பவந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யாழினி (நோர்வே), கிருபானந்தன் (சுவிஸ்), ரமணி (சுவிஸ்), சுபாஜினி (பிரான்ஸ்), வளர்மதி (இலங்கை), ரஜனி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சங்கீதா, சஜீதன், சர்மிலி (நோர்வே), ஜவாகர் (சுவிஸ்), சுவெஸ்திகன், வினோஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் சித்தப்பாவும் கிரிசன், பிரியங்கன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2004) திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*"விஜியகிரி"*
*செட்டிவளவு ஒழுங்கை,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(34807)(29-14-17)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி வ.கமலா

(வடலியடைப்பு)

வடலியடைப்பைச் சேர்ந்த திருமதி வ. கமலா அவர்கள் நேற்று (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் யாழ். திருநெல்வேலி ஸ்ரீகாயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீராஜ்குமார் அவர்களின் அருமைத் தாயாரும் வரதராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வடலியடைப்பு இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதி அஞ்சலி திருநெல்வேலி ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*வடலியடைப்பு.*
(34809)(29-14-17)
தகவல்:
வரதராஜசிங்கம்
(கணவர்).

# ஆசியக் கிரிக்கெட் சம்பியன்

# கிண்ணம் இலங்கை அணிக்கு!

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையே கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் பகலிரவாக நேற்று நடைபெற்ற ஆசியக்கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணி 25 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஆசியக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையணி சார்பாக அணித்தலைவர் மார்வன் அத்தப்பத்து 65 ஓட்டங்களையும், குமார் சங்ககார 53 ஓட்டங்களையும், திலகரத்ன தில்ஷான் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணிசார்பாக இர்பான் பதான் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சச்சின் டெண்டுல்கர் 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஆஸிஷ் நெஹ்ரா 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீரேந்தர் ஷேவாக் 40 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.



வெற்றி இலக்காக 50 ஓவர்களில் 229 ஓட்டங்களைப் பெறவேண்டுமென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. இதன்படி, இலங்கை அணி 25 ஓட்டங்களால் இந்தியாவை வீழ்த்தி ஆசியக் கிரிக்கெட் சம்பியனானது.

இந்திய அணி சார்பாக சச்சின் டெண்டுல்கர் 74 ஓட்டங்களையும், ஸஹிர்கான் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும், ஹர்பஜன் சிங் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக உபுல்சந்தன 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சனத் ஜயசூரிய 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், திலகரட்ண தில்ஷான் 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் நுவன் சொய்சா 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகனாக இலங்கை அணித்தலைவர் மார்வன் அத்தப்பத்துவும், தொடரின்நாயகனாக சனத் ஜயசூரியவும் தெரிவுசெய்யப்பட்டனர். (க)

## வெலிகந்தவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் பொலீஸ் கான்ஸ்டபிளான எஸ். பத்மசிறி, ஊர்காவல்படையைச் சேர்ந்த அஜித் அபயசேகர ஆகியோரும் பயணியான முஸ்லிம் ஒருவரும் காயமடைந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அபயசேகர அபாய கட்டத்தில் இருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலீஸார் வைத்திருந்த கிரனேட் வெடித்ததா அல்லது வேறு ஏதாவது குண்டுவெடித்ததா என்பதை அறிய பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-3)

## தேங்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாக அறிய வந்தது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக இலங்கை அரசு நடத்திவரும் இரட்டைநாடகப் போக்கை இந்தச் சந்திப்பின்போது மதியுரைஞர் பாலசிங்கம் விலாவாரியாக எடுத்துரைத்தார்.

அமைதி முயற்சி தொடர்பாக இலங்கை அரசுக்கென்று ஒரு ஸ்திரமான - நிலையான - மாறாத - நிலைப்பாடு இல்லை. அரசுத் தலைவி ஜனாதிபதியே நாளொரு பேச்சும் பொழுதொரு கதையுமாக நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருக்கின்றார் என்பதை மதியுரைஞர் பாலா சுட்டிக்காட்டினார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டும் பேசுவதற்கு அரசும் அரசுத் தலைவியும் முன்வராத பட்சத்தில் சமாதான நடவடிக்கைகள் முன்நகர்வதற்கு வாய்பே இல்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

அப்படி ஓர் இணக்கத்துக்கு ஜனாதிபதி வருவார் என்றாலும் இப்போது தினசரி ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களையும் நிலைப்பாட்டையும் அவர் அடிக்கடி வெளியிட்டு வருவதால் அத்தகைய இணக்கம் தொடர்பாக அவரிடம் எழுத்து மூலம் உறுதிபெற்ற பின்னரே மேற்கொண்டு அமைதி முயற்சிகளை முன்நகர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

அரசின் மெத்தனப் போக்கும் தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நிராகரிக்கும் அதன் பேரினவாதக் கொள்கையுமே சமாதான முயற்சிகள் முடங்கிப் போனமைக்கு அடிப்படைக் காரணங்கள் என்பதைத் தெளிவுபடுத்திய அவர், அரசுக்கு எதிராக மேற்குலகின் அழுத்தம் பிரயோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அனுசரணையாளர்களான நோர்வே முன்னெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தற்போதைய நிலையில் இருதரப்பு முரண்பாடு முற்றியிருப்பதால் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் உள்ளன என்பதை உணர்ந்துள்ள நோர்வே, இருதரப்பு முரண்பாட்டுச் சூட்டைத் தணிவிப்பதற்காகக் குளிர வைக்கும் காலம் ஒன்றுக்கு விடயத்தை விட்டுப்பிடிக்கத் தான் தீர்மானித்திருப்பது பற்றிய தகவலை இச்சந்திப்பில் கோடிகாட்டியதாகத் தெரிகின்றது.

சமாதான முயற்சிகள் தேங்கிக் கிடப்பதால் சர்வதேசத்தின் நிதி உதவிகள் நாட்டுக்குக் கிடைப்பதும் தாமதமாகும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெளிவுபடுத்தின. (க)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அதில் விவரிக்கப்பட்டுள்ளன.

கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார வாழ்வில் தமிழ் மக்கள் எதுவித முன்னேற்றங்களுமின்றி தொடர்ந்து துன்பங்களையும், புறக்கணிப்புக்களையும் அனுபவித்துவருவதை இம்மனு கோடிட்டுக் காட்டியுள்ளது.

அத்துடன், இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் எவ்வாறு தமிழ் மக்களின் பொருண்மிய, சமூக, பண்பாட்டு உரிமைகளை மீறுகின்றது என்பனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் இந்தப் பின்னணியில் உலகளாவிய பொருண்மிய, சமூக, பண்பாட்டு உரிமைகளுக்கான சாசனத்தின் கீழ் தமக்கான உரிமைகளைப் பேணுவதற்காக - தம்மைத் தாமே ஆளும் - நிர்வாக அமைப்பு ஒன்றை உடனடியாகவே பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள இம்மனு, இன்றைய ஒரு சூழலில் இடைக்கால நிர்வாக அமைப்பைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டவர்கள் எனத் தமிழ் மக்களைக் குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கீழ் செயற்படும் இந்த உப ஆணைக்குழு உடனடியாகவே இந்த வேண்டுதலைப் பரிசீலித்து இது தொடர்பான பரிந்துரையை ஐ.நாவுக்கு வழங்கவேண்டும் என்று உலகத் தமிழர் கூட்டமைப்பு இந்த மனுவில் கோரியுள்ளது.

1975இல் கையொப்பமிடப்பட்டு 1997இல் ஸ்ரீலங்கா அரசினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துலக பொருண்மிய, சமூக, பணபாட்டு உடன்படிக்கையின் முதலாவது பிரிவு, மக்கள் பொருண்மிய, சமூக, பண்பாட்டு மற்றும் கலாசார உரிமைகளைக் கொண்டவர்கள் என்பதையும் அதனை அவர்கள் பெறுவதற்கும் பிரயோகிப்பதற்கும் எதுவிதத் தடையும் எவரும் விதிக்க முடியாது என்பதையும் வலியுறுத்துகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## அக்கரைப்பற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் சோதனை செய்யப்பட்டது.

அச்சமயம் அந்த வானில் சில சன்னங்களும், சயனைட்டுகளும் இருப்பதாகக் கூறி அதில் பயணம் செய்த போராளிகளையும், வான் சாரதி, நடத்துநர், விற்பனைப் பிரதிநிதி ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

ராசையா வேந்தன்(சுரேஷ் - ஆலடிவேம்பு), நாகமணி கண்ணதாசன்(வேகநீதன் - கோமாரி), தியாகரத்தினம் குசலகுமார்(சுதந்திரன் - கோமாரி), குணரத்தினம் ரஞ்சன்(கண்ணன் - ஆலடிவேம்பு), நவரத்தினம் ஞானராஜ்(வைகை - தம்பிலுவில்), வேலுப்பிள்ளை யோகச்சந்திரன் (கண்ணன் - தம்பிலுவில்), குணசீலன் தயாசீலன்(மதன் - கோமாரி) ஆகிய போராளிகளும் -

சாரதியான ஏ.ஞானரத்தினம்(தாளையடி, வடமராட்சி), நடத்துநரான தர்மராசா துஷ்யந்தன் (காங்கேசன்துறை), நவரத்தினம் காண்டீபன் (முனைக்காடு) ஆகியோரும் - கைதுசெய்யப்பட்டிருந்தனர். (எ-3)

## கொழும்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை) இரவு முதல் அமைக்கப்பட்டு பொலீஸாரின் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாகக் கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது எனப் பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பொலீஸ் வலயத்துக்குட்பட்ட பகுதிகளில், பொலீஸ் - பொதுமக்கள் இணைந்த குழுக்கள் அமைத்து, பிரதேசத்தில் புதிதாக நடமாடுவோர் மற்றும் சந்தேகத்துக்குரியவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. (க)

## தமிழ்க் கைதிகளின் உணவில் நஞ்சு

கொழும்பு,ஓக.2

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் ஒரு கூண்டில் இருந்த இரு தமிழ்க்கைதிகளுக்கு கடந்த 28 ஆம் திகதி வழங்கப்பட்ட உணவில் நஞ்சு கலந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கைதிகளுக்கு வழங்கப்பட்ட உணவில் இருந்த இறைச்சியில் இருந்து மணம் ஒன்று வீசியதாகவும் -

அதையடுத்து அக்கைதிகள் இதைச் சிறைக் காவலர் கவனத்துக்குக் கொண்டுவந்ததாகவும் - கூறப்பட்டது.

அதையடுத்து அந்த இறைச்சியை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய சமயம் அதில் நச்சுத்தன்மை காணப்பட்டமை உறுதி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து வடகொழும்பு பொலீஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-3-7)

## ஆயுதங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யல்துறை மேலும் தெரிவித்தது.

கைதான மூவரிடமும் இருந்து ரி56 - 2, அதற்குரிய மகஸின் - 2, எஸ்.எல்.ஆர் - 1, அதற்குரிய மகஸின் - 1, கையடக்கத் தொலைபேசி - 1, துப்பாக்கி ரவைகள் சில என்பன மீட்கப்பட்டன என்றும் அரசியல்துறை மேலும் தெரிவித்தது. (எ-3)

## புலிகளுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு இழைக்கும் துரோகம் என ஜே.வி.பியினர் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கேகாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, ஜனாதிபதி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்துப் புலிகளுடன் பேசினால் ஜே.வி.பி. உடனடியாக அரசிலிருந்து வெளியேறும் எனத் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வழங்கவும்கூடாது. அதுபற்றி அவர்களுடன் பேசவும் கூடாது என நடந்துமுடிந்த மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஜே.வி.பியினர் பரவலாகப் பிரசாரம் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)


உங்களுக்கு இதயம் உண்டானால்.....!

அதனைக் கவனிக்க எம்மை அனுமதியுங்கள். எந்தவிதமான சத்திர சிகிச்சையுமில்லை. வெறுமனே சில ஆயுர்வேத குளிகைகள் மட்டுமே! அவை உங்கள் இதயத்தின் தடைகளைக் கரைத்து விடுவதுடன் அவற்றின் விலையும் மிகக் குறைந்ததுவே!

பக்க விளைவுகளோ அன்றி வேறெந்தப் பிரச்சினையோ இல்லை. கடந்த 6 வருடங்களில் எந்தவொரு தோல்வியும் ஏற்பட்டதில்லை.

(இதற்கு உதாரணங்களாக நூற்றுக்கணக்கான முகவரிகளை நாம் சமர்ப்பிக்க முடியும்)

மேலதிக விவரங்கள் தேவைப்பட்டால் தயைகூர்ந்து எமக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துங்கள். 5நிமிடங்கள் மட்டுமே இதற்குச் செலவு செய்தால்போதும். இந்த 5 நிமிடங்களை நீங்கள் வாழ்நாளில் என்றும் நினைவு கூருவீர்கள். இந்த 5 நிமிடங்கள் தான் உங்கள் எஞ்சிய வாழ்நாளில் மாரடைப்பு, நெஞ்சுவலி போன்ற எந்தவித நோய் குறித்த பயங்களுமின்றி சாதாரண ஆரோக்கியமான ஒரு வாழ்வை நீங்கள் வாழச் செய்யவுள்ளது.



**மூட்டு வீக்கம்/ மூட்டு வலி**

மூட்டு வலிகளுக்கும் முறிந்த எலும்புகளை இணைப்பதற்கும் உகந்த எமது ஆயுர்வேத கூட்டுக் குளிகைகளைப் பாவித்துப் பாருங்கள்.

**ஒற்றைத் தலைவலியா?**

ஆச்சரியமூட்டும் ஒரு நிவாரணி எமது ஆயுர்வேத குளிகைகளால் ஒற்றைத் தலைவலியை நிரந்தரமாகக் குணமாக்கலாம்.

**தீராத முதுகுவலியா?**

நீண்டகால முதுகுவலிக்கு ஒரு நிவாரணம் எமது ஆயுர்வேத மருந்து நம்பமுடியாத சுகத்தை உங்களுக்குத் தருகின்றது.

**சிறுநீர்ப்பை சுரப்பி உபாதைகள்**

எமது ஆயுர்வேத குளிகைகளைப் பாவித்து சிறுநீரகச் சுரப்பி அறுவைச் சிகிச்சையிலிருந்து தப்பித்துக்கொள்ளுங்கள்.

கல்லீரல் நோய்கள், உணர்ச்சியின்மை, நிக்கோட்டின் அடைப்புகள், மன நலக்குறைவு, இருதயவால்வு நோய்கள், வாத மூட்டு வீக்கங்கள் போன்ற நோய்களுக்கும் எம்மிடம் சக்திவாய்ந்த மருந்துகள் உண்டு.

விவரங்களுக்கும்; இலவச ஆலோசனைக்கும்

FAIR PHARMA (PVT)LTD
(ஆயுர் வேத மருந்துகள் தயாரிப்போர்)

Level 5/ East Tower /1C, WORLD TRADE CENTRE, Colombo 01
Phone: 0094-11-5517897, 5551879, 5558442
Fax: 0094-11-5517756
E-mail: Fppvtl @ lankabellnet. Com
Website: w w w fppvtl. Com

கிடைக்கும் இடங்கள்

Dr.A.L.D.P லியனகே றோகன
ரசாயனாகாரய
இல.,3 H.K. எட்மண்ட் மாவத்தை,
காலி. T.P. 091 2246535

Dr. ஆனந்த சமரநாயக்க
மெடிக்கல் சென்ரர்
நியூ புத்தளம் வீதி, பொத்தனேகம.
அனுராதபுரம். T.P.025 2225180

Dr.பிரசன்னா கல்தேரா
சுவபியஸ ஆயுர்வேத வைத்தியசாலை
562, கொழும்பு வீதி, கம்பஹா.
T.P. 033-4674024

Dr.T.D. மதுரநாயகம்
187, கடற்கரை வீதி,
கொழும்பு-11.
T.P. 011 2421598

Dr.லலித் அலவத்தகொட
நேச்சர் கியூர் ஆயுர்வேதக் கிளினிக்,
831-1, கோட்டே வீதி, எதுன்கொட்டே.
T.P. 011-2888319

போவத்த பெஹெத் சாலாவ (PVT) LTD
144, கொழும்பு வீதி,
கண்டி.
T.P. 081 222 2904

Dr. D.M.S.K. டசநாயக
கம்பஹா மெடிக்கல் ஹோல்
231, கொழும்பு வீதி, குருணாகல.

Dr.S.M. விஜயசிங்க பண்டார
மெடிக்கல் ஹோல், களுகமுவ.
T.P. 037-224 9134

(சி.36692)(14-32-17)



பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS. (33927)



SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY: Mr.M.A. HARI
புதிய பிரிவு ஆரம்பம்:
03-08-2004 செவ்வாய் மாலை 5 மணி
TUESDAY, THURSDAY (5p.m- 6.p.m)
HARY'S INSTITUTE
இல,564, கஸ்தூரியார் வீதி
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்), யாழ்ப்பாணம். (34783)



பதவி வெற்றிடம்
எமது நெல்லியடிக் கிளை நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் பதவிக்கான வெற்றிடமுள்ளது. மேற்படி பதவிக்கான நேர்முகப்பரீட்சை 06. 08. 2004 (வெள்ளிக்கிழமை) காலை 10. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.
தகைமைகள்
- வடமராட்சியை வதிவிடமாகக் கொண்டிருத்தல்.
- கணனி அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.
குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிப்போர் தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
இயக்குநர்
Institute of Business Management Studies (IBMS)
NMMV Road, Nelliady.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.